# அறத்தமிழ் ஞானம்

உண்மையே கடவுள்

அறம்: 1 க சிந்தனை: 10 கം

'' ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான் செயலரிது
தானமும் தவமும் தான் செய்வராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே.'' — ஔவையார்

சாதி, சமய, இன வேற்றுமையற்ற
மாதாந்த ஆத்ம சிந்தனைச்
சஞ்சிகை

**1 - 10 - 92**

நிறுவனரின் சிந்தனைத் தொகுப்புகளும்
பிற ஆக்கங்களும்.

விநாயகர் தருமநிதிய வெளியீடு.

★ சிக்கனம் - சமத்துவம் - உடலுழைப்பு ★

சிவமயம்

## இதழினுள்ளே

★ அறத்தமிழ் ஞானத்தின் எண்ணங்கள்

★ 9 கிரகத்திற்கான ஐந்து பூதங்களும், அவற்றின் சக்திகளும்

★ உடல் வாழ்க்கையில் 1, 2, 3 எண்குறிப்பிடும் 3 பூதங்களுகளும், தத்துவங்களும்

★ பாபாவின் பொன்மொழிகள்

★ செந்நிறச் செவ்வாய்

★ வளமானவாழ்விற்கு — நலமான நற்சிந்தனை

★ பலபணி செய்யும் வள்ளல்

★ நற்சிந்தனை

★ அன்பாயிரு அடிமையாயிராதே

★ அறிவுக் களஞ்சியம்

★ எமது சமய வரலாற்றில் செவ்வாய்க் கிரகம்

★ வாய்மையும் – ஒற்றுமையும்

★ சிந்தனைக்கு சில துளிகள்

★ கூடியிருந்து கொடுமைசெய்யும் விச ஜந்துக்கள்

★ உண்மையே கடவுள்

★ சமுதாய நலன்

★ நிறுவனரின் வாழ்க்கை — வரலாறு

★ பாரதியாரின் 71வது நினைவுச் சிறப்பிதழ் ஓர் ஆய்வு

★ குடும்பத்திற்கேற்ற மனைவி எப்படி அமையவேண்டும்

★ சிந்திப்போம் செயல்பெறுவோம்

★ பாராட்டுக் கடிதங்கள்



சிவமயம்

## சமர்ப்பணம்



இம் மாநிலம் உருவாகி அதில் உயிரினங்கள் உருவாக தங்கள் சக்தியை எந்நேரமும் உதவிக் கொண்டிருக்கும் ஐந்து பூதங்களான காற்று தீ, நீர், நிலம், ஆகாயம் இவற்றிற்கும் எம்மை உருவாக்கிய தந்தை, தாய், குரு முதலானோருக்கும், நாம் வாழ உணவு அளித்துக்கொண்டிருக்கும் தாவர வர்க்கம் முதல் மனித குலம் வரையான சகல சீவராசிகட்கும் எமது வணக்கத்தைச் செலுத்தி இவர்கள் பாதார கமலங்கட்கு இந் நூலைச் சமர்ப்பணம் செய்வதில் பூரண ஆத்ம திருப்தி அடைகின்றோம்.

—நிறுவனர்

விநாயகர் தரும நிதியம்

இப்பிரதி முடிவு விலை: ரூ. 16/-

இலவசக் கழிவாக ரூ. 4/-

கொடுக்க வேண்டியது ரூ. 12/-

பதிப்பித்த பிரதிகள் — 2100



# அறத் தமிழ் ஞானத்தின் எண்ணங்கள்

நாம் பிறந்து வளர்ந்து, சைவசமயத்திலும் தமிழ் மொழியிலும் அறிவைப் பெற்ற காரணத்தினால் இவற்றை வைத்தே பிரபஞ்ச தத்துவத்தை ஆராய முற்படுகிறோம். எமக்குத் தெரியாத சமய வரலாறுகளிலோ வேறு மொழிகளிலோ எம்மால் அறிய முடியாது. நாம் அதிகம் கற்கவில்லை. பொருளாதார வறுமையால் அவைகளை அறியக்கூடிய தருணம் ஏற்படவில்லை. ஆகவே, நாம் கற்ற, வளர்ந்த அனுபவத்தைக் கொண்டு விடைகாண முயற்சி செய்கின்றோம். இதில் மற்ற மொழிகளையோ, மற்றைய சமயங்களையோ நாம் கீழ் நிலைப் படுத்த விரும்பவில்லை. வேறு மொழிகளில் வளர்ந்த விஞ்ஞான அறிவையும் சிறுகப்பெற்றே இவைகளை அறிய முற்படுகிறோம். மொழி, சமயம், இனம், சாதி வேற்றுமை பாராது உண்மையைத் தேட முயற்சிக்கிறோம்.

மணிவாசகரின்,

''உற்றாரை யான் வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன்
கற்றாவின் மனம்போல கசிந்துருக வேண்டுவனே''

இதுவே எமது மனநிலையாகும்.

''பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை
அவை சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை''

என ஒரு பேதையின் கருத்தை பாரதியார் கூறி மனம் வேதனைப் படுகிறார்.

அவரது வேதனையை நீக்கவேண்டியது எமது கடமை. இவை எமது வாழ்க்கையின் குறிக்கோளாகும். எந்தச் சமயங்களையோ

எந்த மொழிகளையோ உதாசீனம் செய்வது எமது நோக்கமல்ல அறத்தின் வழிகளில் சாதி. சமய, மொழி வேற்றுமைக்கு இடமில்லை. ஆனால் எமக்குத் தெரிந்த மொழியிலும் சமயத்திலுமே நாம் கற்றுள்ளதை உணர்த்த முடியும். இதை உணர்ந்த விதங்களையும் தெரிந்த மொழியில்தான் விளக்க முடியும். இதை சகலரும் ஏற்றுக் கொள்வார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. விளக்குவதாயிருந்தால் சிறுகச்சிறுகக் கூறியே விளக்க முடியும்.

கீழ்க்காணும் பாடலை சிரமேற்கொண்டு எமது கடமையை செயலாக்க முன்வந்துள்ளோம்.

''அன்னை எத்தனை எத்தனை அன்னையோ
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ
பெண்டிர் எத்தனை எத்தனை பெண்டிரோ
முன்னம் எத்தனை எத்தனை சென்மமோ
மூடனா யடியேனும் அறிந்திலேன்
இன்னும் எத்தனை எத்தனை சென்மமோ
இறைவா கச்சி யேகம்பனே.''

ஆகவே, சனசமூக நிலையங்களில் எமது வெளியீடுகளை வாங்கி வாசித்து சகலரும் தத்துவ உண்மைகளை அறிய உதவுமாறும், ஆன்மா பிறப்பை இல்லாமல் செய்ய கருமமாற்றுமாறும் அனைவரையும் அன்புடனும் பண்புடனும் பணிவுடனும் இருகரம் கூப்பி வேண்டுகிறோம். வணக்கம்.

நிறுவனர்



## 9 கிரக சக்திகளான ஐந்து பூதங்களும் அவற்றின் செயற்பாடுகளும்

| தீ | நீர் | காற்று | பூமி | ஆகாயம் |
|---|---|---|---|---|
| கிரகங்கள் | | | | |
| சூரியன் செவ்வாய் | சந்திரன் வெள்ளி | வியாழன் | இராகு கேது | புதன் சனி |
| இல | | | | |
| ஒன்று ஒன்பது | இரண்டு ஆறு | மூன்று | நான்கு ஏழு | ஐந்து எட்டு |
| த. இல | | | | |
| ௧, ௯ | ௨, ௬ | ௩ | ௪, ௭ | ௫, ௮ |
| இல | | | | |
| 1, 9 | 2, 6 | 3 | 4, 7 | 5, 8 |
| கடவுள் | | | | |
| சிவன் முருகன் | உமாதேவி இலக்குமி | விநாயகன் | சரஸ்வதி நாராயணன் | வீரபத்திரர் வைரவர் |
| பொருள் | | | | |
| உண்மை ஞானம் | சக்தி ஆசை | அறிவு | கல்வி தொழில் | நியாயம் நீதி |
| மனிதநிலை | | | | |
| பிதா இளைய புத்திரன் | மாதா மனைவி | முதற்-புத்திரன் | பிதாவின் பிதா மாதாவின் பிதா | மாமன் ஏவலாள் |
| உலோகம் | | | | |
| பொன் | வெள்ளி | செம்பு | ஈயம் | இரும்பு |
| ஐம்புலன் | | | | |
| ஒளி | சுவை | நாற்றம் | ஊறு | ஓசை |
| பொறி | | | | |
| கண் | வாய் | மூக்கு | மெய் | செவி |
| செயல் | | | | |
| கடித்தல் | பருகல் | நக்கல் | மெல்லல் | விழுங்கல் |

இவைகளின் செயற்பாடுகள் பற்றிய விளக்கங்கள் வரும் வெளியீடுகளில் வெளிவரவுள்ளன.

## உடல்வாழ்க்கையில் 1, 2, 3 எண் குறிப்பிடும் மூன்று பூத கூறுகளும் இவை குறிப்பிடும் தத்துவங்களும்

*விநாயகனான காற்றுப் பூதத்தை வணங்கி விளக்கங்கள்தர முற்படுகிறோம்.*

| ௧ | ௨ | ௩ |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| ஒன்று | இரண்டு | மூன்று |
| தீ | நீர் | காற்று |
| உண்மை | சக்தி | அறிவு |
| சூரியன் | சந்திரன் | வியாழன் |
| சிவபெருமான் | உமாதேவி | விநாயகர் |
| பிதா | மாதா | பிள்ளை |
| பித்தம் | கபம் | வாதம் |
| சூடு | குளிர் | நடுநிலை |
| உயிரெழுத்து | மெய்யெழுத்து | உயிர்மெய்யெழுத்து |
| அறம் | பொருள் | இன்பம் |
| உடல் | பொருள் | ஆவி |
| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
| ஞானம் | தமிழ் | அறம் |
| சிக்கனம் | சமத்துவம் | உடலுழைப்பு |
| சூக்கும தேகம் | தூலதேகம் | காரணதேகம் |
| சிவப்புமின்சாரம் | நீலமின்சாரம் | மஞ்சள்மின்சாரம் |
| செயல் | சொல் | எண்ணம் |

இவை ஒவ்வொன்றும் பற்றிய விளக்கங்கள் வரவுள்ள வெளியீடுகளில் வெளிவரவுள்ளன.



## பாபாவின் பொன் மொழிகள்

★ அகங்காரங்களே தீயகுணங்களின் தாய் இல்லம்
அகங்காரத்தை அகற்ற நகர சங்கீர்த்தனம் வல்லமை கொண்டது.

★ அகந்தையே துயரத்திற்கு மூலகாரணம்
அகந்தை அகன்றால் அடைவீர் மகிழ்ச்சியும் சுகமும்.

★ அன்பு, பொறுமை, சகிப்புத்தன்மை மற்றும்
பண்பு, மனஉறுதி, ஈகை இவை மனிதனை தேவனாக்கும்.

★ அன்பும் அமைதியும் இறைவனின் இயல்பு
அறமும் வாய்மையும் இறைவனிடம் இணைக்கும்.

★ அறநெறி பற்றி வாய்மை காத்து
அன்புவழி வாழ்ந்து அமைதி அடைவீர்

★ ஆனந்தம் வெளிப் பொருட்களில் இல்லை
ஆத்மாவெனும் மெய்ப்பொருளே ஆனந்தத்தின் எல்லை.

★ ஆனந்தம் என்பது நாம் விரும்புவதைச் செய்தலில் இல்லை
ஆனந்தம் நாம் செய்யவேண்டியதை விரும்புதலிலே உள்ளது.

★ ஆன்மாவே நீ எனும் உண்மை அறிந்தால்
ஆனந்தம் நிரந்தரமாகப் பெற்றுவிடுவாய்.

★ ஆண்டவன் எப்போதும் உனக்குள்ளே உன்பின்னே உளான்
உனது பார்வையை உலகிலிருந்து திருப்பினால் அவரைக் காணலாம்

★ ஆண்டவன் கரங்களில் இயங்கும் கருவியாக இரு
அவரது விருப்பப்படி உன்னை அவர் பணிக்கு பயன்படுத்தவிடு.

★ இதயத்தில் தூய்மை இருந்தால் தான்
இறைவன் குடிகொள்ள வசதியாகும்.

★ உன்னுடைய குற்றங்குறைகளைத் தேடி அவைகளை விட்டொழி பிறருடைய குற்றங்குறைகளைத் தேடுவது அல்ல சரியானவழி

★ உன்னுடைய உடலே இறைவன் வாழும் ஆலயம் உனது பெருமைமிக்க உடலை அலட்சியம் செய்வது அவலம்.

★ உன்னுடைய சிந்தனை, சொல், செயல் மூன்றும் ஒன்றாக அதுவும் நன்றாக இருத்தல் உன்னை மனிதனெனக்காட்டும் சின்னம். இல்லையேல் உனக்கும் விலங்குக்கும் பேதமில்லை.

★ ஊனமுற்றோருக்கு உதவுவது உனது கடமை தியானம், ஜபம் செய்தலைவிட இது பேலான சாதனை.

★ ஊக்கத்துடன் உனது கடமையை செய்தலும் பயனை நோக்காது இறையர்ப்பணமாகச் செய்வதுமே கர்மயோகம்.

★ ஐம்புலன்களை அடக்க முயற்சி எடுக்காது ஐந்து வேளை பூஜை செய்தும் நற்பயனிராது

★ இதயம் புகைப்படக்கருவியின் கண்ணாடி போன்றது. மனமே பதிவு நாடா. மனதில் தோன்றும் எண்ணங்கள் பதிவு நாடாவில் (தன்மாத்திரை) பதிவாகின்றன. ஆகவே தீய எண்ணங்களை நுழையவிடலாகாது.

★ முன்னதாகவே பயணத்தைத் துவக்கி, ஜாக்கிரதையாக ஓட்டிச் சென்று, பத்திரமாக சேருவதுபோல் கடவுளைக்காணும் பயணத்திலும் சிறுவயதிலேயே துவக்கி ஒரே நாட்டத்துடன் முயல வேண்டும்.

அன்புடன் நாளைத் துவக்கி
அன்புடன் நாளைக் கழிப்பாய்
அன்புடன் நாளை முடிப்பாய்
அன்பே இறைவனை அடையும்வழி.

உண்மை (சத்தியம்) என்பது எப்போதும் நிலையான ஒன்றே.

# செந்நிறச் செவ்வாய்

இன்று பிரபஞ்சத்தின் கதாநாயகன் செந்நிறச் செவ்வாய்க் கிரகம் போல் தோன்றுகிறது.

முன்னைய கணிப்பின்படி இந்நூற்றாண்டின் முடிவுக்குள் சந்திரனுக்குச் சென்று செவ்வாய் செல்ல அமெரிக்க $500 பில்லியன் செலவாகுமென மதிப்பிடப்பட்டன. வானசாஸ்திர சமூகம் இவ்வாய்வுகளை நடத்தவிரும்புகிறது.

அணுசக்தியால் இயங்கும் விண்வெளிக் கலம் செவ்வாய்க்கிரகம் சென்று திரும்ப சுமார் இரண்டு வருடங்களுக்குக் குறைவாகப் பிடிக்கலாமென கருதப்படுகிறது. இக்குறுகிய கால நடவடிக்கையால் சூரிய சுவாலைகளிலிருந்தும், கதிரலைகளிலிருந்தும் விண்வெளி வீரர்களின் மேலுள்ள தாக்கங்கள் குறைக்கலாம் எனவும் எண்ணப்படுகிறது.

## காய்கறி வகைகள்

அடுத்த நூற்றாண்டு இறுதிக்குள் பழவகைகள், காய்கறி வகைகள் அங்கே உண்டாக்கலாமென இந்நாட்டில் வசிக்கும் பிரபல எழுத்தாளரும் விஞ்ஞானியுமான ஆர்தர் சி. கிளார்க் கூறுகிறார்.

பிரபஞ்சத்தில் மனிதர் மாத்திரம்தான் புத்திஜீவி என்றும் கூற முடியாத நிலையிலுள்ளது என கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. பல காலங்களாக பறக்கும் தட்டுத் தகவல்களை நோக்கும் போது ஐயம் எழும்பத்தான் செய்யும்.

சமய ரீதியில் செவ்வாய்க்கு பெரும் பங்கு அளிக்கப்பட்டுள்ளது. துர்க்கா அம்மனை ஆடிச் செவ்வாயில் வழிபட்டால் நன்மையென்றும் பெரும்பாலான சைவர்கள் செவ்வாயில் விரதம் அனுட்டிப்பதும் உண்டு. திருமணப் பேச்சில் ஏழில் செவ்வாய் எடுபடுவதுமுண்டு.

பண்டைக்காலத்திலே நாகரிகமடைந்த ரோமாபுரியின் புராணக் கதைகளின்படி செவ்வாய்க் கிரகம் சண்டைக் கடவுள். இது பலமுள்ள இளம் வீரரைப்போல் தோற்றமுடையது. யுபிட்டருக்கும், யுனோசுக்கும் பிறந்த பிள்ளை செவ்வாய். இதவின் நாமத்திற்காக ரோமாபுரியின் வருடத்தின் முதலாவது மாதமாக மார்ச் என அழைக்கப்படுகிறது.

வானவியல் ஆய்வின்படி சூரியனிலிருந்து நாலாவது கிரகம். சூரிய குடும்பத்தில் பூமிக்கு அடுத்ததாகும். பொதுவாக செந்நிறக் கிரகமென அழைக்கப்படுகிறது.

சூரியனிலிருந்து சுமார் 141,600,000 மைல்கள் தொலைவிலுள்ள இக்கிரகத்தின் மத்தியரேகை விட்டம் கிட்டத்தட்ட 4217 மைல் களாகும்.

இரவில் இருண்ட வானத்தில் செவ்வாய்க்கிரகம் நட்சத்திரம் போன்று மிகவும் பிரகாசமாக செந்நிறத்துடன் துலங்கும்.

நெடுங்காலமாக செவ்வாய் ஒரு வியப்புக்கும் அவதானிப்புக்கும் உட்பட்டு விளங்குகிறது. கிரகங்களுள் சந்திரனுக்கு அடுத்தபடியாக பல ஆய்வுகளுக்கும் ஆராய்ச்சிகளுக்கும் உட்படுத்தப்பட்ட அபூர்வ கிரகம்.

தூரதிருஷ்டிக் கண்ணாடி கண்டுபிடித்தபின் இதன் மேற்பரப்பை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. பின்பு பூமியுடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடியதாகவிருந்தது.

வான சாஸ்திரவியல் விஞ்ஞானிகள் மத்தியில் செவ்வாய்க் கிரகத்தில் உயிர்வாழ்வன அதாவது புத்திஜீவிகள் இருக்கலாமோ என்ற எண்ணம் பிரபல்யமடையத் தொடங்கிற்று.

அங்கே கால்வாய்கள் காணப்பட்டன. இதனை ஆராயுமிடத்து செவ்வாய் நாகரிகம் இருந்ததற்கு அறிகுறிபோல் தென்பட்டன.

1970ஆம் ஆண்டுப் பகுதியில் மனிதனில்லாமல் அனுப்பப்பட்ட விண்வெளிக்கலம் செவ்வாய்க் கிரகத்தை அண்மித்து மேற்பரப்பைப் பார்க்க ஏதுவாயிருந்தது. இதன்படி கால்வாய் தெரிந்தது, கானல் எனக் கூறப்பட்டது. கிரகத்தில் உயிர்வாழ்வன உள்ளதா? இல்லையா? என்பதை அறியவே விண்வெளிக்கலம் அனுப்பப்பட்டது.



ஏனைய கிரகங்களோடு ஒப்பிடும் போது செவ்வாய் சிறிது. பூமியின் விட்டத்திலும் அரைப்பங்கானது.

செவ்வாய் சூரியனைச்சுற்றிவர 687 பூமியின் நாட்கள் எடுக்கின் றது. செவ்வாய் வருடத்தில் அதாவது ஒவ்வொரு 2·1 பூமியின் வரு டத்தின்போது சூரியனிலிருந்தும் பூமியில் இருந்தும் தூரம் மாறுபடு வதுண்டு. இச்சமயம் செவ்வாய் பூமிக்குச் சமீபமாகவரும் அதனால் விஞ்ஞானிகளின் ஆய்வுக்கு அனுகூலமானது.

## பூமியை ஒத்தது

சில விடயங்களில் செவ்வாய்க்கிரகம் பூமியினை ஒத்து இருக்கிறது. பூமியின் நாளிலும்விட செவ்வாய்க்கிரக நாள் சிறிது நீண்டநாளாக இருக்கும். கால நிலைகள் பூமிபோன்றே இருக்கின்றன.

செவ்வாயின் வருடம் நீண்டதாகவுள்ள காரணத்தினால் பூமியின் காலநிலையிலும் பார்க்க இரண்டு மடங்கு நீளமாகவுள்ளது.

பூமிபோன்றே செவ்வாய்க்கிரக முனைகள் சிறிது தட்டையாகவும் மத்திய ரேகையில் சிறிது பொருமியும் உள்ளது.

மேலிருந்து பார்க்கும் போது செவ்வாய்க் கிரகம் செந்நிறமாகவும் மேற்பரப்பில் தடித்த துண்டு நிலம் போன்றவையும் தென்படுகின்றன, வேகக் காற்றினால் வீசியெறியப்படும் பொருட்களின் இடமாற்றத் தால் இவைகளின் பிரகாசம் நேரத்திற்கு நேரம் மாறுபடுகின்றன.

1971ஆம் ஆண்டு தொடக்கம் செவ்வாயின் சுற்றுப் பாதையில் விடப்பட்ட ஆய்வு சாதனங்களின்படி வானசாஸ்திரவியல் விஞ்ஞானி கள் கற்பனை பண்ணியதிலும் பார்க்க இக்கிரகம் வேறுபட்டதும் கவர்ச்சியுடையதுமானது எனவும் அறியக்கிடக்கிறது.

இது ஒருவித மண்ணும் எரிமலைகள் கொண்டதுமாக இருக்கிறதாக அறியவருகிறது.

மேற்பரப்பு உடைசலுடையதாகவுமுள்ளது. இது உள்ளுக்குள் நடைபெறும் அதிர்ச்சியினால் ஏற்படலாமென தெரிகிறது.

## வைக்கிங் படம்

1970ஆம் ஆண்டு இரண்டு வைக்கிங் கலங்கள் ஆளில்லாமல் அனுப்பப்பட்டன, அமெரிக்காவினால் அனுப்பப்பட்ட இக்கலங்கள் வடமுனையை அடைந்தது.

வைக்கிங்கினால் அங்கிருந்து அனுப்பப்பட்ட படங்களின்படி கற்பாறை குவியங்களுடையதென்றும் பூமியின் வனாந்தரம் போன்று காட்சி அளிக்கின்றது.

இங்கேயும் அங்கேயுமாக பல உடைவுகள் மேற்பரப்பில் தென்படுகின்றன. அதன் மண்ணும் கற்பாறைகளும் பிரகாசமான செம்மஞ்சள் நிறம் அடிக்கிறது. எதிர்பார்த்ததுபோல் வானம் கடும் நீலம் அல்ல ஆனால் சிவந்த செம்மஞ்சள் நிறம் அடிக்கிறது.

எதிர்பார்த்ததுபோல் சிலிக்கனும் இரும்பும்தான் முக்கியமாக மண்ணிலிருக்கின்றன. கல்சியம், பொஸ்பரசு, அலுமினியம் போன்றவை சிறிதளவேயாகும்.

செவ்வாயிலுள்ள கற்பாறைகள் பூமியினதோ சந்திரனதோ போல் ஒத்திருக்கவில்லை.

செவ்வாயின் காற்று நிலை பூமியின் கடல் மட்டத்திற்கு 20 மைலில் மேலே எப்படி இருக்குமோ அப்படியே இருக்கிறது.

முக்கியமாக கரியமல வாயுவும் சிறிதளவில் நைதரஜன், பிராணவாயு, தண்ணீர்வாயு, முகில்கள் பொதுவாக மலையுச்சியில் தோன்றும்.



சூரியனிலிருந்து செவ்வாய்க்கிரகம் தூரத்திலிருப்பதால் பகல் நேர வெப்பம் பூமியிலும் பார்க்க குறைவானதே. மதிய நேரம் மத்திய ரேகையில் 70பாகை பரனைற்றுக்கு மேலே செல்வது அரிது. முனைகளில் சராசரி வருட வெப்பம் - 180 பாகை பரனைற் ஆகும்.

திடீர் திடீரென வெப்பம் மாறுவதால் பெரும் காற்று செவ்வாயில் வீசுவது பொது நிகழ்ச்சி, சூரியனுக்கு சமீபமாகவரும் போது வேகக்காற்று வீசும். அவ்வேளையில் மணித்தியாலத்திற்கு 200 மைல் வேகத்தில் வீசும் காற்றினால் மணல் புயலென எழும்பி மேற்பரப்பை சில வாரகாலம் மூடிநிற்கும்.

செவ்வாய்க்கு இரண்டு சந்திரன்களுண்டு. போபொஸ் என்றும் டெய்மெஸ் என்றும் அழைப்பர். ரோமானிய யுத்த கடவுளின் இரண்டு காப்பாளர்களான (பயமும். பயங்கரமும்) இரண்டும் மிகவும் சிறியன.

போபொஸ் பெரியது. அச்சு ஊடாக 12 மைல்கள் நீளமும், மறுபக்கத்தால் 17 மைல்கள் நீளமுமுடையதாகும்,

இது 3700 மைல்கள் தொலைவில் நின்று செவ்வாய்க் கிரகத்தை 7½ மணித்தியாலயத்திற்கு ஒரு முறை சுற்றுகிறது.

டெய்மெஸ் சிறியது இது 12500 மைல்கள் தொலைவில் நின்று 30¼ மணித்தியாலயத்திற்கு ஒருமுறை செவ்வாயை சுற்றி வருகிறது.

பூமிக்கு அருகாமையிலுள்ள செந்நிறக்கிரகத்தை ஆய்வு செய்வதால் புலன் சிலசமயம் கிடைக்கலாம். போக்குவரத்துக்கள் சுலபமாக வருங்காலங்களில் ஏற்படக் கூடிய சாத்தியம் தோன்றலாம்.

நன்றி: கேசரி சஞ்சிகை 30-08-92

உ —

# வளமான வாழ்விற்கு நலமான நற் கருத்துக்கள்

தொகுப்பு: செல்வி. க. சகுந்தலாதேவி

1. நாம் ஏமாறக் கூடாது, மற்றவரை ஏமாற்றவும் கூடாது.

2. வேகமாய்ப் போவது முக்கியமில்லை. சரியான பாதையில் போவது தான் முக்கியம். அப்போதுதான் நாம் போய்ச் சேரவேண்டிய இடத்திற்குப் போய்ச்சேருவோம்

3. அதர்ம வழியில் செல்வது எளிது. தர்மவழியில் செல்வதோ சிரமங்கள் மிகுந்தது. அதனால் பெரும்பாலானோர் அதர்ம வழியில் செல்கின்றனர். அதனால்தான் உலகத்தில் பெரும்பாலானோர் அமைதியற்றுத் தவிக்கின்றார்கள்,

4. உலகத்தில் எல்லாமே பயனுடையதுதான். சாவு எவ்வளவு அற்பமானது என்பதை வாழ்வு போதிக்கின்றது. வாழ்வு எவ்வளவு அற்பமானது என்பதை சாவு போதிக்கின்றது.

5. குருவிச்சை மரம் மாதிரி மற்றவர்களில் முழுவதும் தங்கி நிற்றல் மனித வாழ்விற்கு முரணானது. எமது கால்களே எமக்கு உறுதி. எமது முயற்சியே எமது வளர்ச்சி.

6. வெளிப்படுத்தப்படும் வார்த்தைகள் நன்னெறியாய் இருக்கவேண்டும். தெரியப்படுத்தப்படும் செயற்பாடுகள் நேர்த்தியானதாக இருக்கவேண்டும். பரிணமிக்கும் உறவுகள் பரிசுத்தமாகி இருக்க வேண்டும்.

7. வெற்றிக்கு மூலக்கல் தோல்வியே தோல்வியிடம் நான் சரணடைய மாட்டேன். எனது முயற்சிகளில் தோல்வி அடைந்தது உண்மை தான். எனினும் எனது வாழ்க்கை ஒரு தோல்வியல்ல.

8. மலர்ந்த மலர்கள் வாடுவது கண்டு மலரப்போகும் மலர்கள் அஞ்சுவதில்லை.

9. மனித மனங்கள் கலங்குவது அணுகுண்டுகளால் அல்ல அன்பற்ற இதயங்களால்.

உ —

# பல பணி செய்யும் வள்ளல்

— சுப்பிரமணியம் ஸ்ரீகுமரன்
முத்தமிழ் மன்ற நூலகம்.

முருகுப்பிள்ளை ஐயா நானறிந்த வரையில் பார்க்கும் போது பசுவாகவும், பாயும் போது வேகமாகவும் உள்ள ஒரு மனிதரெனின் மிகையல்ல. அவரிடம் உள்ள சொத்தினை சமூக சேவைகளுக்கு வழங்கி வரும் வள்ளல் தன்மை தான் முதலில் அவர்பால் என்னை ஈர்த்தது. தான், தனது குடும்பம், தனது சுற்றம் என்ற எல்லைகளுக்கு அப்பால், இந்த மண் மீதும், தமிழ் மொழி மீதும், அல்லல் படும் மக்கள் மீதும் அவர்கொண்ட ஈடுபாடும், வழங்கி வரும் உதவிகளும் அடுத்து என்னைக் கவர்ந்தது. அவரது முயற்சிகளை வாழ்த்தியும் அதற்கு எனது பங்களிப்பை வழங்கத் தயார் என்ற உறுதியையும் நான் கடிதமொன்றில் அவருக்குக் குறிப்பிட்டேன்.

அதற்கு அவர் பதில் எழுதி. வார்த்தைகளாலேயே தனது பணிகளுடன் என்னையும் இணைக்கச் செய்துவிட்டார். பல மாதங்களின் பின்னர்தான் அவரைச் சந்திக்க நேர்ந்தது. அப்போது மிகவும் எளிமையாக, பார்த்தால் ஒரு பசு போல அமைதியானவராகக் காணப்பட்டார்; அவர் மிகவும் அமைதியானவர். ஆனால் சில விடயங்களில் அவர் கொண்டிருக்கும் 'முரட்டுப் பிடிவாதம்' அதிகம். ஆம்! அவருக்கு முதல் அவசியமானது குருவணக்கம் 'உ—' போடவேண்டியது. அடுத்தது கூடிய பட்சம் தமிழையே எழுத்திலும் பேச்சிலும் கைக்கொள்ள வேண்டும் என்பது. குரு வணக்கம், இல்லாத கடிதங்களையோ, அல்லது ஆங்கில ஒப்பத்துடன் வரும் தமிழ் நிறுவனங்களது தமிழ்க் கடிதங்களையோ காணும்போது அவர் பிடிவாதக்காரராக காணப்படுவார். குருவை மதிப்பதிலும் தமிழைப் போற்றுவதிலும் அவருக்குள்ள விருப்பையே இது எடுத்துக் காட்டுகிறது.

அவர் தனது ஞானக் கருத்துக்களை ஒரு புறம் வழங்கிக் கொண்டு மறுபுறம் சமூகத்திற்கு அவசியமான கட்டுரைகளையும் எழுதி 'அறத்தமிழ் ஞானம்' சஞ்சிகையை வெளிக் கொணர்கிறார். அது போலவே சிறுவர்களை அறநெறியில் வழிப்படுத்தக் கூடிய வகையில் 'அறம் வளர் இளந் தமிழ்' சஞ்சிகையை வெளிக்கொண்டு வந்துள்ளார், இந்நூல் யாவும் இலவச வெளியீடு என்பது யாவரும் அறிந்த விடயமே. அது தவிர, இலவச அரிசி விநியோகம், கல்வி வசதி, அறநெறிப் பரீட்சை என சமூகத்திற்கும், மாணவர்களுக்கும் அவசியமான பல பணிகளை ஆற்றி வருகிறார்.

இவ்வாறு எமது சமூகத்திற்கும், நாட்டுக்கும் அவசியமான பணிகளை வழங்கி வரும் முருகுப்பிள்ளை ஐயாவை நான் போற்றியே ஆக வேண்டும். மேலும் பல ஆக்கபூர்வமான பணிகளை நல்கி, பல்லாண்டுகள் வாழ அவரை வாழ்த்துகிறேன்.

# நற்சிந்தனை

1. சுறுசுறுப்பாயிரு ஆனால் படபடப்பாயிராதே
2. சிக்கனமாயிரு ஆனால் கருமியாயிராதே
3. அன்பாயிரு ஆனால் அடிமையாயிராதே
4. இரக்கங் காட்டு ஆனால் ஏமாந்துபோகாதே
5. கொடையாளியாயிரு ஆனால் ஒட்டாண்டியாகி விடாதே
6. வீரனாயிரு ஆனால் போக்கிரியாயிராதே
7. இல்லறத்தை நடாத்து ஆனால் காமவெறியனாயிராதே
8. பற்றற்றிரு ஆனால் காட்டுக்குப் போய்விடாதே
9. நல்லோரை நாடு ஆனால் அல்லோரை வெறுக்காதே

— தபோவனம் அருள்மலை
ஞானானந்த பகவான்

குட்டிக் கதை 

## அன்பாயிரு அடிமையாயிராதே

ஏது விசயமானாலும் யார் காலிலாவது விழுந்து விசயத்தை சாதிப்பவர்கள் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். கடவுள், பெற்றோர், குரு தவிர மற்றையோர் எல்லோர் கால்களிலும் நாம் சற்றும் கவலையின்றி விழமுடியுமா?

காலில் விழும் காரியம் பற்றி ஓர் உண்மைக் கிரேக்கக் கதையுண்டு.

ஒரு கொடுங்கோலரசன் காலில் விழும்படி ஏதென்ஸ் நகரில் உள்ள மக்களை வற்புறுத்தி வந்தான். எல்லோரும் நமக்கென்ன என்று தவறாது தினம் தினம் விழுந்து நல்லபெயர் எடுத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் ஒரு தத்துவஞானி மட்டும் விடாப்பிடியாகக் காலில் விழ முடியாதெனச் சாதித்தார். ஆனால் கொடுங்கோலனிடமிருந்து அவ்வளவு எளிதில் தப்பிவிட முடியுமா?

அவன் ஊரைக் கூட்டி இன்று மாலை தத்துவஞானி என் காலில் விழுகிறார் என முரசறைவித்து தத்துவஞானியின் ஆறு வயதுள்ள ஒரேமகனின் கழுத்தில் கத்தியை வைத்து ஐயா, பெரியவரே, என் காலில் விழுகிறாயா; அல்லது மகன் தலையை எடுத்து விடட்டுமா? என்று கேட்டவுடன் புகழ்மிகு தத்துவஞானி உடனடியாக ஒரு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார் கொடுங்கோலனுக்கு. எல்லோர் முன்னிலையிலும் கொடுங்கோலன் மகிழ்ச்சியுடன் வீடு சேர்ந்தான், தத்துவ மேதை மக்களைப்பார்த்துக் கூறினார்.

மக்களே நான் கொடுங்கோல் மன்னனின் காலில் விழுந்ததாகவா நினைக்கிறீர்கள்? அல்ல, அல்ல, நான் அவனது மூளைக்குத்தான் வேண்டுகோள் விடுத்தேன். ஆனால் கடவுள் அவனுக்கு மூளையைத் தலையில் கொடுப்பதற்குப் பதில் காலில் கொடுத்துவிட்டார் என்றார். இம்மாதிரி கால் (¼) மூளையர் அல்லது கொத்தடிமைத்தனம், இன்று எங்கும் பரவிவருகிறது.

இதுபற்றித்தான் மகான்கள் பலரும் அன்றே கூறினார்கள் போலும் அடிமையாக இராதே என்று.

நன்றி: கலைமகள்

தொகுப்பு: ராஜா

# அறிவுக்களஞ்சியம்

47 ஐவகை நிலங்கள் யாவை?
குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

48 இந்தியாவில் மக்கள் தொகை மிகுந்த மாநகரம் எது?
கல்கத்தா

49 தொலைபேசியைக் கண்டவர் யார்?
கிரகாம்பெல்

50 நீர் கொதிக்க எத்தனை டிகிரி வெப்பம் வேண்டும்?
100° சென்டிகிரேட்

51 முதலில் முளைக்கும் பற்கள் எது?
பால் பற்கள்

52 திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?
ஜி. யு. போப்

53 இரும்பின் வகைகள் யாவை?
தேனிரும்பு, வார்ப்பிரும்பு, எஃகு இரும்பு

54 மனித உடம்பிலுள்ள எலும்புகளின் மொத்த எண்ணிக்கை எத்தனை?
206

55 கிறிஸ்துவர்களின் வேதப் புத்தகம் எது?
பைபிள்

56 காளிதாசரின் உலகப் புகழ்பெற்ற நாடகம் எது?
சாகுந்தலம்

57 துவிச்சக்கரவண்டியை (சைக்கிள்) கண்டுபிடித்தவர் யார்?
மாக்மில்லன்

58 மின்மாற்றி (டிரான்ஸ்பார்மர்) என்றால் என்ன?
மின்சக்தியை கூட்டும் குறைக்கும் கருவி



59 மனித விலா எலும்புகள் எத்தனை?
12 சோடி

60 உலகிலேயே முதன்முதலாக இருந்த பெண் பிரதமர் யார்?
திருமதி பண்டாரநாயக்கா, ஸ்ரீலங்கா

61 ரேடியத்தை கண்டிபிடித்தவர் யார்?
மேடம் கியூரி

62 மனித உடலில் உள்ள முதுகெலும்புத் தொடரின் நீளம் என்ன?
சுமார் 60 முதல் 70 செ. மீ,

63 நீரிழிவுக்கு காரணமான ஓமோன் எது?
இன்சுலின்

64 சாரணர் சங்கம் நிறுவியவர் யார்?
பேடன் பவல்

65 போப்பாண்டவரின் இருப்பிடம் எது?
வத்திக்கான் அரண்மனை

66 அச்சு இயந்திரம் யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
யான்கூட்டன் பர்க்

67 ஆகாயவிமானத்தைக் கண்டுபிடித்தவர்கள்?
ரைட் சகோதரர்கள்

68 இஸ்லாமியர்களின் வேதப் புத்தகம் எது?
குர்ஆன்

69 தமிழ்த் தாத்தா யார்?
உ. வே. சுவாமிநாத ஐயர்

70 நெப்போலியனை வீழ்ச்சியடையச் செய்த போர் எது?
வாட்டர்லூ போர்

71 கதையாசிரியர் கல்கி எழுதியுள்ள முக்கிய நூல்கள் யாவை?
அலை ஓசை, பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், பார்த்திபன் கனவு

72 ஐரோப்பாவின் நோயாளி என வர்ணிக்கப்படுவது எந்த நாடு?

துருக்கி

73 மனித உடலில் எத்தனை தசைகள் உள்ளன?

639 தசைகள்

74 கப்பலோட்டிய தமிழன் யார்?

வ. உ. சிதம்பரனார்

75 இந்தியாவின் முதல் பிரதமர் யார்?

ஜவகர்லால் நேரு

76 ரேடியோவை கண்டுபிடித்தவர் யார்?

மார்க்கோனி

77 பாரதிதாசனுக்கு மறுபெயர் என்ன?

கனகசுப்பு ரத்தினம்

78 புகைவண்டியைக் கண்டுபிடித்தவர் யார்?

ஆல்பர்ட் ஜனல்டீன்

79 முதன் முதலில் நோபல் பரிசு பெற்ற இந்தியர்?

சர். சி. வீ. ராமன்

80 பட்டினப்பாலையைப் பாடியவர்?

உருத்திரங்கண்ணனார்

81 தேவாரத்தைத் தொகுத்தவர் யார்?

நம்பியாண்டார் நம்பி

82 விவேகானந்தரின் குரு யார்?

இராமகிருஷ்ண பரமஹம்சர்

83 கடிகாரத்தின் தந்தை என்பவர் யார்?

கலிலியோ



84 ஒலி எவ்வாறு உண்டாகிறது?

பொருள்களின் அதிர்வு அடைவால்

85 மின்கலத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

மைக்கேல் பாரடே

86 முதல் மின்கலத்தை அமைத்தவர் யார்?

வோல்ட்டா

87. தந்திக் கருவியைக் கண்டவர் யார்?

மோர்ஸ்

88 காற்றுக்கு எடை உண்டா?

உண்டு

89 காற்று சேர்வையா, கலவையா?

கலவை

90 நீரில் எரியக்கூடிய உலோகம்?

சோடியம்

91 நீரின் பகுதிப் பொருட்கள் யாவை?

ஐதரசன், ஓட்சிசன்

92 திரைப்படத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

தோமஸ் அல்வா எடிசன்

93 1979ம் ஆண்டு நோபல் பரிசு பெற்றவர் யார்?

திரேசா அம்மையார்

94 நிலாவில் முதன்முதல் கால் பதித்தவர் யார்?

நீல் ஆம்ஸ்ரோங்

95 ஆஸ்திரேலியாவின் தலைநகர் எது?

கான்பெரா

96 கனடாவின் தலைநகர் எது?

ஒட்டாவா

# எமது சமய வரலாற்றில் செவ்வாய்க் கிரகம்

நாம் ''பிரபஞ்சத்துவமும் எண்கள் ஒன்பதும்'' என்ற நூலில் செவ்வாய்க் கிரகம் முருகன் எனக் குறிப்பிட்டிருந்தோம், விஞ்ஞான ஆய்வின்படி செவ்வாய்க் கிரகத்தை விபரித்துள்ளார்கள். பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னரே சைவசமய வரலாற்றில் சிவபெருமானது இளைய புதல்வரான முருகனைப்பற்றி கந்தபுராணம் கூறுகிறது. இவற்றுடன் இன்றுள்ள விஞ்ஞான ஆராய்வை ஒப்பிடும்போது எமது சமய வரலாற்றை இயற்றியவர்கள் மெஞ்ஞானம் மிக்க தேவர்கள் எனலாம். அவர்களது ஞான அறிவின் மூலம் ஞானத்துக்குரிய கடவுள் முருகன் என குறிப்பிட்டுள்ளார்கள். எமது தமிழ் மொழியில் ஒன்பது எண்களை உருவாக்கி ஒன்பது எண் குறிப்பிடும் கடவுள் ஞான முருகன் என கூறியுள்ளார்கள். இவற்றை நன்றாக ஆராயும்போது சில பல உண்மைகள் வெளிவருகின்றன. சிவபெருமானைக் குறிப்பிடும் ஒன்று என்ற சொல்லில் முதல் ஒலியான ''ஒன்'' என்பதுடன் ''பது'' என்பதைச் சேர்த்து ஒன்பது என இளைய மகனுக்கு பெயரிட்டது முற்றிலும் சரியானதே.

முதல் எண் ஒன்று. கடைசி எண் ஒன்பது. முதல் எண் உண்மை. கடைசி எண் ஞானம். முதல் எண் தீ, கடைசி எண் ஒளி. தீயில் தோன்றிய இப் பிரபஞ்ச உயிரினங்கள் ஒளியான அறிவைப் பெற்று தீயுடன் கலந்தேயாகவேண்டும். தீயின்றி ஒளியில்லை. ஒளியின்றி தீயில்லை. இவை முழுவதும் உண்மையாகும்.

ஒன்று ஒன்பது சொல்லின் ஓசையை இணைத்தது போல எண்வடிவ அமைப்பிலும் க, கூ என சிறிது மாறுபடுத்தி அமைத்ததை நோக்கும்போது தகப்பனும் இளைய மகனும் என்பது சந்தேகமின்றி நிரூபணமாகிறது. மூன்று வட்டமுள்ள (க)ஒன்று எண்ணை வேறுவிதமான மூன்று வட்டம் அமைத்து ஒன்பது என ஆக்கியுள்ளார்கள். ஆனால் விநாயகனைப் போல் தாயும் தகப்பனும் சேர்ந்து முருகனை உருவாக்கவில்லை. இக் காரணங்களால் முருகனது வடிவம், முருகனது குணம் முதலிய சகலதும் சிவனது (தீப்பொருள் அல்லது சூரியன்) வடிவத்துடனும் குணத்துடனும் ஒத்ததாய் அமைந்துள்ளதைக் காணுகிறோம். அத்துடன் சிவபெருமானது நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய தீயில் உருவாகியுள்ளார் என்பதும் சரியெனப் புலப்படுகிறது. சிவபெருமானுக்கு ஞானத்தை உபதேசித்தவன் முருகன் எனவும் கூறி



யுள்ளார்கள், முருகனுக்கு வள்ளி, தெய்வானை என இரு சக்திகள் உண்டென்றும் வள்ளியை திருமணம் செய்யும்போது விநாயகனை அவ்விடத்துக்கு அழைத்தாரெனவும் கூறியுள்ளார்கள்.

விஞ்ஞான ஆராய்வின்படி பூமியிலும் அரைவாசியானது செவ்வாய் என கண்டுள்ளார்கள். இதை எமது சமய வரலாற்றில் சிவனது இளைய மகன் எனக் கூறியுள்ளார்கள். செவ்வாய்க் கிரகத்துக்கு சிறிதும் பெரிதுமான இரு சந்திரன்கள் உண்டு எனக் கண்டுள்ளார்கள். சமய வரலாற்றில் இதை வள்ளி, தெய்வயானை என்ற இரு சக்திகள் எனக் கூறியுள்ளார்கள். சிறிய சந்திரன் செவ்வாயை விரைவாக வலம் வருவதால் ( 7½ மணி ) இச் சந்திரனை வேடர்குலத்து உதித்த தொழில் சக்தி வள்ளி நாயகி என குறிப்பிட்டுள்ளார்கள். பெரிய சந்திரனான தெய்வயானை நாயகியை இந்திரன் மகள் என குறிப்பிட்டுள்ளார்கள். பெரிய சந்திரன் இக் கிரகத்திலிருந்து கூடிய தூரத்தில் அசைந்து செவ்வாய்க் கிரகத்தைச் சுற்ற கூடுதல் நேரமாகிறது. ஆகவே தெய்வயானை தேவலோக மகள் என்பது சரியென உணர முடிகிறது.

செவ்வாய் கிரகத்தில் காற்று மண்டலம் உண்டென்று கண்டுள்ளார்கள். இதை எமது சமய வரலாற்றில் வள்ளியை மணம் செய்ய விரும்பி காற்றான விநாயகனை ( தமையனை ) அவ்விடத்துக்கு அழைத்ததாக குறிப்பிட்டுள்ளார்கள். உலகை முதலில் சுற்றி வருபவருக்கே மாங்கனி கொடுப்பதான வைபவத்தில் முருகனுக்கு மாங்கனியைக் கொடாததால் அவர் சினமடைந்து தூர இடம் போனதாக சமய வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார்கள், சூரியனிலிருந்து பூமியிலும் பார்க்கக் கூடிய தூரத்தில் செவ்வாய் அமைந்துள்ளதைக்கொண்டு இக் கூற்று சரியெனப் புலப்படுகிறது.

இவைகள் எல்லாவற்றையும் அதாவது விஞ்ஞான ஆராய்வையும் கந்தபுராண வரலாறுகளையும் சிந்திக்கும்போது பல உண்மைகள் வெளிவருகின்றன. ஆதிகால ஞானிகளுக்கு உள்ள ஞான அறிவின் ஒளித்தன்மையில் தெரிந்த உண்மைகள் விஞ்ஞான அறிவிலும் மேம்பட்டது என்பது உண்மையேயாகும். ஆனால் இவை உண்மைவழிச் செல்லாத பகுத்தறிவு மக்களுக்கு விளங்க முடிவதில்லை

ஆகவே செவ்வாய்க் கிரகம் ஞான முருகன் என்பதும் ஒன்பது எண் என்பதும் முற்றிலும் உண்மை என விளங்குகிறது.

## வாய்மையும் ஒற்றுமையும்

எண்ணம், சொல், செயல் ஆகியவற்றில் வாய்மையைக் கடைப்பிடிக்கத் தவறினார்கள். வாய்மை அற்றுப் போனதால் ஒற்றுமையை நிலைநாட்ட முடியவில்லை. அந்த ஒற்றுமையின்மையைப் பயன்படுத்தி ஆட்சியாளர்கள் தாம் சாதுரியமாகவும், சமயோசிதமாகவும், தந்திரமாகவும், சூழ்ச்சிகரமாகவும் செயற்பட்டு தமிழர்களைத் தோற்கடித்தார்கள்.

இப்போதும்கூட, தமிழர்களின் ஒற்றுமையின்மையே அவர்களுக்கு முதல் எதிரியாக, சாபக்கேடாக விளங்குகின்றது. தலைவர்களிடையே ஒற்றுமை வளர்வதற்கு உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசாத வாய்மை மிக மிக அவசியம், ஏன் மக்கள்கூட உள்ளே ஒன்றும் பெயருக்கு வெளியே இன்னொன்றுமாக நடிக்கிறார்கள். சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற்போல, கிட்ட இருப்பவர் யார் எனப் பார்த்துத் தங்கள் கொள்கைகளை மாற்றிக்கொள்கிறார்கள். தாம் வசதியாக வாழ்ந்தால் போதும் போராட்டம் அவசியமற்றது என்று கருதுவோர்கூட இருக்கிறார்கள். இவர்கள் எதிர்காலச் சந்ததியினர் நலனில் அக்கறை இல்லாத சுயநலமிகள்.

பொதுவாகத் தமிழர்கள் சிறுவிடயத்திற்கும் ஒற்றுமை காண முடியாதவர்கள். பொது நலன் கருதிய கருத்து ஒற்றுமையுடன் வருவதைவிட, சுயநலம் நாடிய கருத்துவேற்றுமையையே நிலைநாட்ட முயற்சிப்பவர்கள். இந்தப் பொல்லாத குணாம்சம் மாறும்வரை, தமிழர்கள் சுதந்திரம் பெறுவது என்பது கல்லில் நார் உரிக்கும் கஷ்டமான பணியாகவே இருக்கப்போகிறது. — நன்றி **உதயன்.**

---

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. — குறள்



## சிந்தனைக்கு சில துளிகள். ...

நாம் இன்று போராட்டச் சூழல் நிறைந்த காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். நாம் ஒவ்வொருவரும் துன்பங்கள் நிறைந்த பல சம்பவங்களைச் சுமந்திருக்கலாம். இல்லை சந்தித்திருக்கலாம். இவைதான் இன்றைய நிலைப்பாடு. இவ்வகையான துன்பச் சுமைகளை எம்மீது திணித்து எம்மைப் பணியவைக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள்தான் இவை. எம் வாழ்வையும் வளத்தையும் பாலைவனமாக்கி எம் பசுமை நினைவுகளை வெறுமையாக்கி அந்த வெறுமையில் இனிமைகாண முனைகின்ற காலத்தில் வாழும் நாம் எம்மை முதலில் திருத்தப் பழகவேண்டும். உண்மை கசப்பானது என்றாலும்கூட அந்த உண்மையைக் கண்டறிவதே எமது நிதியத்தின் குறிக்கோளாகும்.

எனவே, எமது சமுதாயத்தில் புரையோடிப்போய் இருக்கும் பழக்கத்தை முதலில் சீர்தூக்கிப்பார்ப்போம். துவிச்சக்கரவண்டியில் பயணஞ்செய்யும்போது, இன்றைய இளைஞர்களோ, யுவதிகளோ வீதியில் ஒழுங்குமுறையில் செல்லாது வீதியைத் தடைசெய்வதுபோல கைகோர்த்தும்—கதைத்தும் செல்வது வேதனைக்குரிய ஒன்றாகும். இவ்வகையான நடைமுறையால் வீதிவிபத்துக்கள் நேர இடமுண்டு அல்லவா, விபத்துக்களால் தினம் தினம் எவ்வளவுபேர் இறக்கின்றார்கள் என்ற புள்ளி விபரங்களை எண்ணிப்பார்த்தால் நாம் செய்யும் தவறுகள் புரியும் சந்தர்ப்பம் ஏற்பட இடமுண்டு.

அநேக வீடுகளில் வீட்டு வாசல் கதவுகள் திறப்பது வெளிப்பாடாய் அமைத்துள்ளார்கள். இப்படிக் கதவுகளை அமைப்பதினால் கதவு திறந்தபடி வீதியைத் தடைசெய்துகொண்டேயிருக்கும், இந்தக் கதவை சிலபேர்கள் உள் பக்கமாய் அமைத்து மற்றவர்களுக்கு இடையூறு கொடுக்காதும் செய்துள்ளனர். இப்படியான உயர் மனநிலை கொண்ட மனிதர்கள் சிலர் இருக்க மேற்கூறிய விதமாக மற்

றவர்களின் தடங்கலைப் பற்றிச் சிறிதும் சிந்தியாது தமது வசதியே பெரிது என நினைத்துச் செயல்பெற்று வீதிக்கு வெளிப்பக்கம் திறக்கும் கதவை அமைப்பவர்கள் சிறிது சிந்திக்கவேண்டும்.

பொருளாதாரத் தடையால் நாம் சீரழிந்து சிதைவடைந்து வாழ வழிதெரியாது மக்கள் வேதனையோடு நாட்களைக் கடத்திக் கொண்டு — எரிபொருளும் — மின்கலமும் (பற்றறி) இன்றி இருண்ட உலகில் காலத்தைக் கழிப்பது யாவரும் அறிந்த ஒன்றாகும்;

வெளியால் திறக்கும் கேற்றை இரவு வேளைகளில் சிலபல சந்தர்ப்பங்களில் திறந்து வைத்துவிட்டு வீட்டார் உள்ளே இருக்க இரவு நேரங்களில் துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்வோரோ, நடையில் செல்வோரோ இந்தக் கேற்றில் மோதி மண்டையை உடைத்ததையும் — உடலின் சில பாகங்களில் காயத்தையோ, முறிவையோ, நோவையோ ஏற்படுத்திக்கொண்டு மனதுக்குள் குமைந்துகொண்டு செல்வோரையும் கண்டுவருகின்றோம். வைத்திய வசதியின்றி அல்லல்படும் இவ்வேளை பொறுப்பற்ற செயல்களால் நாம் எமது மக்களுக்கு துரோகம் இழைப்பவர்களாகின்றோம்.

இந்த வெளிக் கதவு அமைப்பு தேவைதானா? இந்தக் கதவு அமைப்பால் எமக்கு என்ன பிரயோசனம் என எண்ணிப் பார்ப்போர் எவரும் இலர். அடுத்தவர் துன்பத்தால் இனிமை காணுவோருக்கும் எமக்கும் என்ன வித்தியாசம் என்று எண்ணிப்பார்க்கின்றோமா, இல்லையே — ஏன் இந்த வேதனையான நிகழ்வுகள் எமக்குத் தேவையா, இவைதான் ஒரு குறை என்றால் பேசாது இருந்து விடலாம். ஒரு குறையா — இல்லையே. எமது சமுதாய அமைப்பில் உள்ள குறைகளை அடுக்கிறேன் பாருங்கள். வீட்டில் நடும் பூமரக் கொப்புகளை மதில்களுக்கு மேலால் வீதிக்கு வளரவிடுதல், வீட்டில் இருக்கும் சிறு தென்னைகளின் ஓலைகளை வீதிக்கு சாயவிடுதல். இதைக் கண்டாலும் அதை வெட்டிவிட மனம் இல்லாது இருத்தல் வீட்டு வேலிக்கோ காணி வேலிக்கோ போகும் பாதைப் பக்கமாய் இலந்தை முள் கட்டுதல். வீட்டுக் கிணற்று நீரை வெளியே பாயவிடுதல், குப்பையை வீதியில் கொட்டுதல், எல்லை வேலியை அரக்கி அடைத்தல்.



இக் குறைகளை நாம் ஏன் இப் பகுதியில் குறிப்பிடுகிறோம் என்றால் நான்—நான் வாழும் மனநிலை மறைந்து நாம்—நாம் வாழும் மனநிலை வளரவேண்டும் — பெருகவேண்டும் என்ற நல் எண்ணத்துடனேதான்.

மழைகாலங்களிலே நீர் தேங்கி நிற்பதாலும், குப்பை கூழங்கள் குவிந்து கிடப்பதினாலும் நுளம்புகள், ஈக்கள் பெருகுவதை நாம் அறிந்திருப்போம். இந்த நுளம்பாலும் ஈக்களாலும் பல நோய்கள் பரவுவதையும் நாம் அறிந்திருப்போம். அறிந்திருந்தும் தெரிந்தோ தெரியாமலோ குப்பைகளை வெளியே கொட்டுகின்றோம்.

குப்பைகளை வெளியே கொட்டுவதால் இக் குப்பைகளில் இருந்து அசுத்தமான காற்று உருவாகுவதுடன், விச சந்துக்களான தேள், பூரான், கொடுக்கன் போன்றவைகளும் உருவாக நாம் இடமளிக்கின்றோம். இவ் விச சந்துக்கள் உருவாவதுடன் அடுத்தவர்களுக்குத் தீண்டி அவர்களின் மனநிலையைப் பாதிப்பதுடன் பல பிரச்சினைகள் உருவாக சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. இக் குப்பைகளை எமது வீட்டு வளவிலே புதைப்பதால் பயன்தரும் மரங்களுக்கு பசளையாவதுடன் அடுத்தவர்களுக்கு இடையூறு ஏற்படும் சந்தர்ப்பங்களை தவிர்க்க இடம் ஏற்படுகின்றதல்லவா.

வேலியாலோ மதிலாலோ வீதிக்கு வெளியே வளரும் கொப்புகள் இரவு வேளைகளில் கண்ணில் தாக்குவதாலும், வீதிக்கு வெளிப்பக்கமாக கட்டும் முள் காலிலும், துவிச்சக்கர வண்டியிலும் ஏறுவதாலும் எவ்வளவு பிரச்சினைகள் உருவாகின்றது என்று எண்ணிப் பாருங்கள். வைத்திய வசதி குறைவான காலத்திலும், பொருளாதாரத் தடை போடப்பட்ட நேரத்திலும் இவ்வகையான பொறுப்பற்ற நடவடிக்கையால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

''ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடிநிலமே சொந்தமடா'' என்றார் ஒரு கவிஞர். இந்த எல்லைப் பிரச்சினை வடமராட்சியைப் பற்றிப் பிடித்துள்ள சிக்கலான பிரச்சினை. வீட்டுக்கு வீடு வாசற்படி போல் இப் பிரச்சினையால் பாதிக்காதவரே இல்லை என்றே கூறலாம். இவ்விடயங்களால் நீதிமன்று சென்று தமது நேரத்தையும், தொழிலையும் இழந்ததோடு தமது பணத்தையும் இழந்து சமுதாயத்தில் கீழ்த்தர நிலைக்கும் — வறுமையின் பிடியிலும் சிக்கி சீரழிந்த குடும்பங்கள் எத்தனை எத்தனை. இவைகளை நாம் காணுகின்றோம் — கதைக்கின்றோம். ஆனாலும் பிரச்சினை என்று வந்துவிட்டால் மனிதத்தன்மையை இழந்து போர்க்கொடி பிடிக்கின்றோம்.

ஒரு குழி நிலத்தின் பெறுமதி ஓராயிரம் பெறுமதியாக இருக்கும்போது இந்த குழிநிலத்திற்காக பல ஆயிரம் ரூபாய்களை இழக்கின்றோம் என எண்ணாமல் வழக்காடுகின்றோம். மனிதாபிமான ரீதியில் தீர்க்கக் கூடிய இந்த எல்லைப் பிரச்சினை இரு குடும்பத்தாரிடையும் வயிரம் வாய்ந்த வடுக்களாய் உரமேறி ஒருவர் மற்றவரைப் பற்றி வசைபாடி — சினம் தலைக்கேறி கொலைக் குற்றத்துக்கும் அழைந்துச் செல்லும் சந்தர்ப்பங்களை நாம் சந்தித்திருக்கின்றோம் அல்லவா. இப் பிரச்சினையை சீர்தூக்கிப் பார்த்து நன்மை தீமைகளை அலசி ஆராய்ந்து தீர்விற்கான வழியை இரு சாராரும் தேடிக் கொள்வதே நல்லது. ஆனால் இந் நடைமுறையை இரு பக்கத்தாரும் கடைப்பிடிப்பது மிக மிகக் குறைவே என்று கூறலாம். பாவம் பழிக்கஞ்சி சிலர் பேசாமல் இருப்பதும் உண்டு. இதைச் சாட்டாக வைத்து மற்றவர் இவர் தலையிலே மிளகாய் அரைப்பதும் உண்டு. அமைதியும் பிரச்சினை இல்லாத வாழ்வையும் விரும்புவோர் பலர் தமது நிலத்தை இழந்துள்ளதும் நாம் அறிந்த ஒன்றாகும்.

இப் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாம், இவ்வகையான சிக்கல்களுக்கு என்ன பரிகாரம் காணலாம் என்பதை இப் பகுதியில் நாமும் எழுதுவதோடு இப் பெரிய பொறுப்பை வாசகர்களாகிய உங்களிடமிருந்தும் பெற்றுக்கொள்வது நலமென நம்புகின்றோம். மேலும் இவ்



எல்லைப் பிரச்சினையை ஆராய்ந்தால் ஒரு காணியை இரண்டாகப் பிரிக்கும்போது நடுவில் ஒரு கயிற்றைக் கட்டியே பிரிக்கின்றோம். இந் நீளப் பகுதியை இரு கூறாக்கி இரு பகுதியினரும் வேலியை அடைத்து வருவதே ஒழுங்கான முறையாகும், அவ்வாறு அடைக்கும் போது கயிற்றின் உட்பக்கமாக அவரவர் அடைப்பது முறையாகும். நடுவில் (இருவருக்கும்) ஒரு முறிவு ஏற்படலாம். இதைப் பொருட்படுத்தத் தேவையில்லை. சுவர் (மதில்) கட்டுவதாயிருந்தாலும் கயிற்றின் உட்பக்கமே சுவரைக் கட்டவேண்டும், இவ்வாறு சுவரைக் கட்டும்போது அச் சுவரின் உட்பக்கமாக அவரவர் தேவையான கட்டுமானங்களை உருவாக்க முடியும். இருவருக்கும் பிரியும் நடு எல்லையில் ஒரு சுவர் ஒருவரது எல்லைக்குள்ளும் மறு சுவர் மற்றவரின் எல்லைக்குள்ளும் அமைவதால் இடம் மீதமாவதுடன் அவரவர் தங்கள் சுவர்களை தமது தேவைக்குப் பாவிக்க முடிகின்றது. இவ்வகையாக சுவர்களையோ வேலியையோ அமைப்பதால் எதிர்காலச் சந்ததியினர் மனக்கசப்பின்றி சந்தோசமாக வாழ நாம் முன்னோடியாக பங்காற்ற வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம்.

இப்பிரச்சனைகள் எமது வளரும் சமுதாய அமைப்பிற்கு பெரிய அச்சுறுத்தலாயும்—ஆபத்தாயும் இருப்பதை அனுபவரீதியாக நீங்கள் சந்தித்திருக்கலாம். எமது சமுதாயம் வளரவேண்டும் — வாழவேண்டும் என விரும்பும் எம் வாசக நெஞ்சங்களே உங்கள் சிந்தனையில் இப் பிரச்சினைக்கு எவ்வகையான வழிமுறைகளை மேற்கொண்டு— சமதர்ம சமுதாயம் அமைவதற்கு உங்கள் கருத்துக்களையும் கணிப்புக்களையும் எமக்கு அனுப்பிவைத்து ஆக்கப் பணி புரியுமாறு அன்போடும் பண்போடும் பணிவோடும் இருகரம்கூப்பி வேண்டுகின்றோம்,

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு.''

— நிறுவனர் —

## கூடியிருந்து கொடுமை செய்யும் விச ஜந்துக்கள்

மனிதன் பூரண சுகவாழ்வு வாழ வேண்டும். ஆனால் அவனது உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் உள்ளம், அறிவு சார்ந்த நூல்களாலும், கல்வி கேள்விகளாலும் நலன் பெறவேண்டும். உயர்வை சமய தத்துவ நூல்களாலும் தெய்வ வழிபாட்டாலும், ஞானத் தியானங்களாலும், சமய வாழ்வினாலும் நாம் பெறவேண்டும். இவ்வாறு வாழ்ந்தால்தான் மனித வாழ்வின் மகத்துவத்தை அடைய முடியும்.

விஷ ஜந்துக்கள் பலவகையின, பாம்பு மட்டும்தான் கொடிய விஷத்தை உடையன அல்ல. பல ஜந்துக்களும் கொடிய விஷ முடையனவாக அமைந்துள்ளன. பாம்புக் கடிகளுக்கு உடனடியாக ஏற்ற சிகிச்சை மூலம் குணப்படுத்துவதற்கு தற்காலத்தில் போதிய மருந்துக்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஆனால், மனிதனுக்குத் தெரிந்தும் தெரியாமலும் நம்முடனேயே வாழ்ந்தும் நமது சூழலையே தனது சூழலாகப் பயன்படுத்தியும் எம்முடனேயே வாழுகின்ற பலவகையான விஷ ஜந்துக்களைப்பற்றிக் கவனமாக இருப்பதுடன் அவை தீண்டிவிட்டால் ஏற்படும் உபாதைகளைத் தீர்க்கும் வழிவகைகளையும் நாம் ஒவ்வொருவரும் அறிந்திருப்பது அவசியமும், அறிவுடமையுமாகும். ஆகவே மனிதனைத் தீண்டுகின்ற பலவிதமான கொடிய நச்சுத்தன்மை வாய்ந்த உயிரினங்களைப் பற்றி விளக்கங்களும் அவைதீண்டிவிட்டால் ஏற்படும் விளைவுகளும் அதற்கு உடனடியாகச் செய்யவேண்டிய சிகிச்சை முறைகளையும் ஒவ்வொருவரும் ஓரளவாவது அறிந்து இருப்பது நமக்குத் தேவை மாத்திரம் அல்லாது மற்றவர்களுக்கும் உதவியாய் இருக்கும்.

விஷ ஜந்துக்கள் என்று கூறும்போது மனிதனுக்கு ஊறு செய்யும் பிராணிகளைக் குறிப்பிடலாம் அவற்றுள் பாம்பு, பூரான், நட்டுவக்காலி, பல்லி, அரணை, பூனை, கீரி, தேள், சிலந்தி,



வண்டுகள், குளவி, நாய், கரப்பான், புழுதி உண்ணிகள் முதலிய வற்றை சிறப்பாக குறிப்பிடலாம்.

### தேள்:-

தேள் கொட்டுவது காத்திராப்பிரகாரமாக நிகழ்வது, காரணம் அது சிறிய பிராணி மறைந்திருக்கும். ஒருவர் தற்செயலாக அதனை மிதித்துவிட்டால் அது கொட்டும். அது கொட்டியவுடன் தாங்கமுடியாத கடுப்பும், எரிவும், ஏற்படும். தேளிலும் ஆறுவகையான தேள்கள் உண்டு அவையாவன;-

1) கருந்தேள் 3) மரத்தேள் 5) ஜலமண்டலத் தேள்
2) செந்தேள் 4) வயல்த்தேள் 6) இராசத் தேள்

இவற்றில் இராசத் தேள் கொடிய விசமுடையது. இது கடித்த 24 மணி நேரத்தில் மனிதன் மரணிக்கவும் கூடும். ஆகவே தேள் தானே கடித்தது என அசிரத்தையுடன் இருந்தவர்கள் ஆபத்தில் அகப்பட்டதும் உண்டு, கொடிய விசமுடைய தேள் கொட்டினால் கடுப்பு, எரிவு மாத்திரமின்றி உடலெல்லாம் வியர்த்து வாந்தி, மயக்கம் முதலிய அறிகுறிகள் காணப்படும். இப்படி இருந்தால் உடனடியாக வைத்தியரைச் சென்றடைய வேண்டும்.

(1) கடித்த இடத்திற்கு மேல் கட்டப்பட வேண்டும்.
(2) கடித்த இடத்தில் நாயுருவி விதையின் சூரணத்தை தண்ணீர் கலந்து கொட்டுவாயிற் தடவினால் விசம் இறங்கும்.
(3) கொட்டிய இடத்தில் கொடுக்கின் முள் இருக்கின்றனவா என அவதானித்து நகத்தின் நுனியால் நீவி அந்த முள்ளை எடுத்துவிட வேண்டும்.
(4) வினாகிரி என்னும் காடியை எடுத்து கொட்டிய இடத்தில் நன்றாகத் தேய்த்தல் வேண்டும்.
(5) பெருங்காயத்தை அரைத்து கொட்டிய வாயில் பத்துப் போடலாம்.

(6) தேங்காய்ப்பாலில் கொஞ்சம் வெல்லத்தைக் கரைத்துக் குடிக்கலாம்.

(7 கொட்டிய இடத்தில் ஈர வெங்காயச் சாற்றைத் தடவலாம்.

இவைகளுக்குப் பயனளிக்காவிடின் வைத்தியரை நாடுவது நல்லது.

## பூரான்:-

பூரான் தேள்வகையைச் சேர்ந்ததாக இருந்தாலும் உருவத்தில் செயல்களில் பல மாறுபாடுகளும், வேறுபாடுகளும் இருப்பதைக் காண லாம். பூரானில் நன்கு வளர்ந்த பூரான் கிட்டத்தட்ட ஆறு அங்குல நீளமிருக்கும். இதன் கால்கள் தொகையாக இருப்பதால் ஆயிரம் கால் பூச்சி என்றும் இதனைச் சொல்வார்கள்.

### பூரான் கடித்தால் ஏற்படும் அறிகுறிகள்:

பூரான் கடித்தவுடன் அவ்வளவாக வலி தெரிவதில்லை சிறிது நேரத்தின் பின்னர்தான் கடித்த இடத்தில் எரிவு தோன்றும். உடலில் அரிப்பு ஏற்படும். தேகம் முழுவதும் தடிப்புகள் ஏற்படக்கூடும். அமாவாசை, பூரணை அட்டமி, நவமி முதலிய கனத்த நாட்களில் அரிப்பு – தடிப்பு ஏற்படும். ஆகையால் உடனடியாகச் சிகிச்சை பெறு தலால் பின்னால் ஏற்படும் சிரமத்தைத் தவிர்க்கக் கூடியதாக இருக்கும்.

### பொதுச் சிகிச்சை :-

(1) பூரான் கடித்த இடத்தில் சிறிது மண்ணெண்ணையைக் கொட்டித் தேய்த்து விட்டால் விசம் முறிந்து வலி, வேதனை தோன்றாது.

(2) குப்பைமேனி என்னும் பச்சிலையை உப்பு மஞ்சள் வைத்து சேர்த்து அரைத்து உடல் முழுவதும் பூசிக் குளித்தால் அரிப்புத் - தடிப்பு நீங்கும்

ஒன்பது மிளகுகளை எடுத்து பனை வெல்லத்துடன் சேர்த்து மென்று தின்பதனாலும் பூரான் விசம் நீங்கும். பூரானில் பல வகை



உண்டு. திருநீல கண்டன் என்றொரு இனமுண்டு இது மிகவும் பெரி யது. இது கடித்தால் கடிவாயில் இருந்து இரத்தம் சொட்டச் சொட்ட ஒழுகும். இதைப்பார்த்து சிலர் பாம்பு என்று பயப்படுவதுண்டு.

### வைத்திய முறை:-

(1) இது கடித்தால் கையாந் தகரை என்னும் பச்சிலை மூலிகையை அரைத்து எலுமிச்சம் பழம் அளவு எடுத்து ஆட்டுப்பாலில் கலக்கி காலை, மாலை குடித்து வந்தால் குணம் ஏற்படும்.

(2) தவசி முருங்கை இலையை அரைத்து ஓர் எலுமிச்சம் பழம் அளவு எடுத்து ஆட்டுப்பாலில் குடித்துவர குணம்காணும்.

(3) விராலிச் செடியின் இலையைப் பாக்களவு அரைத்து வெந் நீரில் கலந்து குடித்தாலும் குணம் காணலாம்.

### பத்தியம்:-

மேலே உள்ள மருந்துகளைப் பாவிப்பவர்கள் உப்பு, புளிகளை உணவில் தவிர்த்துக் கொள்ளல் நலமாகும்

### நட்டுவக்காலி:

நட்டுவக்காலிக்கு அதன்பெயர்கூடக் காரண இடுகுறியாக அமைந் திருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. நண்டு போன்ற கால் இருப்பதால் இப்பெயர் பொருத்தமாக அமைந்திருக்கலாம். இதன் உருவம் தேளைப்போல் இருந்தாலும் அதைவிடப் பல மடங்கு பருமன் உடையது. நல்ல பெரிய நட்டுவக்காலி கிட்டத்தட்ட எட்டுத் தொடக் கம் பத்து அங்குல நீளமுடையதாகவும் கறுத்துப் பெருத்த உருவம் உடையதாகவும் இருக்கும். இதன் விசம் தேள் விசத்திலும் பார்க்க விரியம் குறைந்தது. நட்டுவக்காலி கொட்டிய இடத்தில் சிறு வலி ஏற்பட்டாலும் சிறிய நேரத்தில் குறைந்துவிடும். ஆனால் காயத்தில் புண் உண்டாகி வேதனை தரக்கூடும். ஆகையால் உடனடியாகக் கொட்டிய இடத்தைத் துப்பரவு செய்து சிகிச்சை செய்தால் குணம் ஏற்படும்.

## உண்மையே கடவுள்

### பிரபஞ்சத் தத்துவம் பற்றிய ஆய்வு

### தொடர் - 1

பிரபஞ்சத் தத்துவம் பற்றிய சிந்தனைகளை விளக்கமாகச் சொல்வது அவசியமென உணருகின்றோம். எமது இலவச வெளியீடான 10ம் வெளியீட்டில் இத்தத்துவத்தின் சில பகுதிகளை எழுதி இருந்தோம் திரும்பவும் ஆரம்பத்திலிருந்து இவற்றை விளக்கமாக அறத் தமிழ் ஞான சஞ்சிகையில் எழுதுவதற்கு எண்ணங்கொண்டுள்ளோம்.

பிரபஞ்சத்தின் மூலப்பொருளான சூரியபகவானிலிருந்து சிதறிய நவ கோள்களில்; பூமியும் ஒன்றாகும் இவ்வாறு பிரிந்த கூறுகளான கோள்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. இவை தூரத்திற்கேற்ப வித்தியாசமான காலக்கணக்கில் சூரியனைச் சுற்றி வருகின்றன. இக்கோள்களில் ஒன்றான சந்திரன் பூமியை பட்டும் வலம் வந்து கொண்டு பூமியுடன் சேர்ந்து சூரியனையும் சுற்றுகின்றது. ஆய்ந்து உணர்ந்த ஞானிகள் இவற்றின் தன்மைகளை தமிழ் மொழியில் விரிவாக விளக்கியுள்ளார்கள். தமிழ் மொழிதான் பிரபஞ்சத்தின் முதல்மொழி என்ற நூலில் நாமும் இவற்றை விளக்கியுள்ளோம்.

இவற்றைப் பற்றிய உண்மைகளை ஆழ்ந்து நோக்குமிடத்து தமிழ்மொழி முதலில் தோன்றியதா சைவசமயம் முதலில் தோன்றியதா என ஆராயவேண்டியுள்ளது. உலகிலே பல சமயங்கள் இன்று உள்ளதைத் காண்கிறோம். இவற்றில் முக்கிய சமயங்களான கிறிஸ்தவம், இஸ்லாம், புத்தசமயம் என்பவற்றினை உருவாக்கியவர்கள் மூலம் அவற்றின் காலத்தை அறியக்கூடியதாயுள்ளது. உதாரணமாக கிறிஸ்தவம் 1992 வருடங்களுக்கு முன்னரும், இஸ்லாம் 1400 வருடங்களுக்கு முன்னரும், புத்தம் 2500 வருடங்களுக்கு முன்னரும் உருவாகியதென்று கூறலாம். இந்நிலையில் சைவசமயத்தின் காலத்தை கணக்கிட முடியாத நிலையிலுள்ளது. தமிழ்மொழியின் காலத்தையும்



அறியமுடியாதுள்ளது. இந்நிலையில் தமிழ் மொழியிலிருந்து சைவம் தோன்றியதா? அல்லது சைவசமயத்திலிருந்து தமிழ் மொழி தோன்றியதா? என்று கூறமுடியவில்லை.

சைவசமயத்திலுள்ள சில ஆழமான கருத்துச் செறிவு நிறைந்த உண்மைகள் வேறு சமயங்களில் காணப்படுவதில்லை என்பது உண்மையே. கிறிஸ்தவ, இஸ்லாமிய, புத்த சமயங்கள் என்பவை அவை உருவாகிய காலத்துக்கு முந்திய உண்மைகளை தெளிவாகக் கூறமுடியாமலுள்ளது. ஆனால் சைவசமயமானது காலங்கள் கடந்த நிலையில் பிரபஞ்சத்தின் உண்மைகளை தெளிவுபடுத்தி நிற்பதைக் காண்கின்றோம். நாம் இப்படிக் கூறும்போது மற்றைய மதங்களை உருவாக்கியவர்கள் தங்கள் தியாகத்தின்மூலம் தங்கள்தங்கள் மதங்களை வளர்த்ததோடன்றி நற்கதி அடைந்துள்ளார்கள் என்பதையும் நாம் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். அவர்கள் இவ்வுலகிற்கு ஆற்றிய தியாகசேவை, இறைசேவை, என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது.

சைவசமயங்களின் செயற்பாட்டை எமக்குப் புலப்படுத்தும் புராண இதிகாச வரலாறுகளில் தெரியப்படுத்தியுள்ள ஐந்துபூதச் சேர்க்கையின் பல விஞ்ஞான உண்மைகளை எமது நாகரிக வளர்ச்சியால் பெறப்பட்ட மாயைகளினால் நாம் போர்க்கப்பட்டு கைவிட்டு வந்துள்ளோம். இவற்றை மேலை நாடுகள் உணரத் தலைப்பட்டு எம்மிடம் இருந்து பெற்றுக்கொண்ட பல தகவல்களையும் ஐந்துபூத சேர்க்கையின் விளைவுகளையும் தமது அறிவுக்கு உட்படுத்தி புதிய விஞ்ஞான உலகை கட்டியெழுப்பி வருகின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

சைவசமய வரலாறுகளில் காணப்படும் நிகழ்வுகள் பிரபஞ்ச தத்துவத்தை இலகுவாக நாம் அறியக் கூடிய வகையில் வகுக்கப்பட்டுள்ளன என்பது உண்மையே.

'பிரபஞ்சத்தின் மூலப்பொருளான உண்மைப்பொருளை சைவ சமயம் சிவபெருமான் எனக் கூறுகிறது. இப்பிரபஞ்சத்தின் மூலப் பொருளான சூரியனையே சிவபெருமான் எனக்குறிப்பிட்டுள்ளார்கள்.

பிரபஞ்சத்தின் மூலப்பொருளான சூரியன் எவ்வாறு தோன்றியது என்னும் ஆராய்வினால் எவ்வித பலனும் ஏற்படாது என்பதுதெளிவு இவ்வாறே சிவபெருமானதும் அநாதியையிட்டு எதுவும் சைவசமயத்தில் கூறப்படவில்லை. சிவபெருமானின் சக்தியாக உமாதேவியாரை சைவசமயம் வகுத்துள்ளது. உமாதேவியாரின் தோற்றம்பற்றி சைவசமயம் தெரிவிக்கின்றது.பிரபஞ்சதத்துவத்தில் உமாதேவியாரை சந்திரனாக உணரக்கூடியதாக உள்ளது இந்நிலையில் சந்திரன் சூரியனிலிருந்து வெடித்துச் சிதறிய கோள்களில் ஒன்றாக கருதப்படும்போது உமாதேவியார் மலையரசனின் புத்திரியாக தோன்றியதாகவும் சிவபெருமானில் இருந்து தோன்றவில்லை என்றும் புராணங்கள் கூறுகின்றன

சிவபெருமானின் சக்தியான உமாதேவியாரை சிவபெருமானே உருவாக்கினார் என்று கூறமுடியாத காரணங்களாலேதான் மலையரசனின் புத்திரியாக பிறந்து சிவபெருமானுக்கு சக்தியாக இணைந்தது என்று வகுத்துள்ளார்கள். உண்மை என்னவெனில் சிவபெருமானாலோ (சூரியன்) உமாதேவியாலோ (சந்திரன்) தனியே உயிரொன்றை உருவாக்கமுடியாதென்பதேயாகும்,

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன ஐந்து பூதக் கூறுகளாகும். சூரியன், செவ்வாய் என்னும் கிரகங்கள் தீப் பூதமாகவும் உண்மை ஞானம் என்னும் பொருள்களை உருவாக்குவதாகவும் அமைந்துள்ளன. இந்த பூதத்தை எமது தமிழ்மொழியிலே ஒன்று ஒன்பதாய் உருவாக்கி உள்ளார்கள். இவ் வெண்ணின் ஒலி ஓசையும் நெருக்கமாய் அமைந்தது போலவே எழுத்து வடிவத்திலும் சிறு மாற்றத்துடன் அமைந்துள்ளதைக் காண முடிகின்றது. ( ஒன்று க ஒன்பது கூ ) சந்திரன், வெள்ளி என்னும் கிரகங்கள் நீர்ப் பூதங்களாகவும் சக்தி செல்வம் ( ஆசை ) என்னும் பொருள்களை உருவாக்குவதாகவும் அமைந்துள்ளன. இப் பூதத்தை ( நீர் ) எமது தமிழ் மொழியிலே இரண்டு எண்ணாக உருவாக்கியுள்ளார்கள். ( இரண்டு, உ ஆறு சா ) வியாழக் கிரகம் காற்றுப் பூதமாகவும் அறிவு என்னும் பொருளை உருவாக்குவதாகவும் அமைந்துள்ளது. இப் பூதத்தை எமது தமிழ்



மொழியிலே மூன்று எண்ணாக உருவாக்கி உள்ளார்கள். ( மூன்று ங ) ராகு, கேது கிரகங்கள் நிலப் பூதமாகவும் கல்வி, தொழில் என்னும் பொருள்களை உருவாக்குவதாகவும் அமைந்துள்ளன. இப் பூதத்தை எமது தமிழ் மொழியிலே நான்கு ஏழு எண்ணாக உருவாக்கி உள்ளார்கள். ( நாலு ச ஏழு, எ ) புதன் சனி என்னும் கிரகங்கள் ஆகாயப் பூதமாகவும் நியாயம், நீதி என்னும் பொருள்களை உருவாக்குவதாகவும் அமைந்துள்ளன. இப் பூதங்களை எமது தமிழ் மொழியிலே ஐந்து, எட்டு என்னும் எண்ணாக உருவாக்கி உள்ளார்கள். ( ஐந்து, ரு எட்டு, அ ) இந்த ஒன்பது கிரகங்களில் எட்டு கிரகங்கள் நாலு பூதங்களாக இவ்விரண்டு கிரகங்களின் சக்தியைக் கொண்டுள்ளதை காணுகின்றோம். மற்றைய கிரகமான வியாழன் காற்றுப் பூதம் என்னும் அமைப்பைக் கொண்டுள்ளதைக் காணுகின்றோம். இவ்வைந்து பூதங்களில் காற்றுப் பூதமே முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இப் பூமண்டலத்தில் உள்ள சகல உயிரினங்களும் இயங்குவதற்கு மூலகாரணம் இக் காற்றாகும். எமது சமய வரலாற்றிலே இக் காற்றுப் பூதத்தை முதல் வணங்கும் தெய்வமாக உருவாக்கி உள்ளார்கள் இத் தெய்வத்திற்கு விநாயகன், கணபதி, ஐங்கரன், ஆனைமுகன் என்று பல பெயர்களையும் இக் காற்றுப் பூதத்தின் செயல்களை வைத்தே சூட்டியுள்ளார்கள். மற்றைய நாலு பூதங்களில் இரு பூதங்களான நிலமும் நீரும் இப் பூமியோடு சம்பந்தமானவை. அடுத்த இரு பூதங்களான தீ, ஆகாயம் என்பன மேல் மண்டலத்துடன் தொடர்புடையவை. இந்த ஐந்து பூதங்களின் அணுக்கூறுகளும் வித்தியாசமான கணக்கில் அமைந்து சகல உயிர் இனங்களையும் இயக்கி வருகின்றன.

தமிழ் மொழியில் சூரியனை ஒன்று என்ற எண்ணாகவும், சிவபெருமானாகவும், தீயாகவும், உண்மைப் பொருளாகவும் உருவகித்துள்ளார்கள். சந்திரனை இரண்டு என்ற எண்ணாகவும், சக்திப் பொருளாகவும், நீராகவும் உருவாக்கியுள்ளார்கள். மேற் கூறிய இரண்டு கூறுகளும் ஒருவர் மற்றவரின் உதவியின்றி எதையும் உருவாக்கமுடியாது என்பதேயாகும். மேலும் இதில் கூறப்படுகின்ற என்

களான ஒன்று, இரண்டு என்பன தனித்தன்மை வாய்ந்தவை. ஒன்றான தீயும் (சிவபெருமான்). இரண்டான நீரும் (உமாதேவியார்) சேர்ந்தே மூன்றான (குருபகவான்) காற்று (விநாயகன்) உருவாக்கியுள்ளார்கள். விநாயகனான காற்று இன்றி எதையுமே அறிய முடியாது. காற்று இன்றி எந்த உயிரினமும் இயங்காது. காற்றானது சூடேறியதும் சுத்தமடைந்து லேசாகி மேலெழும்புகின்றது. வெப்பம் படாத காற்றானது பாரம் கூடி சந்து பொந்துகள் நிறைந்த இடத்தை அடைகின்றது. இவ்வாறு கீழ்நிறைக் காற்றானது சந்து பொந்துகளை அடைந்ததும் அவ்விடத்தில் உஷ்ணம் குறைந்த காரணத்தினால் அழுக்கான துர்க் கிருமிகள் உருவாக வழிவகுத்ததைக் காணுகின்றோம். வெப்பத்தினால் லேசாகி மேலெழுந்த காற்றானது நீராவியை அள்ளிச்சென்று குளிர் உள்ள இடங்களில் மழையாகப் பெய்விக்கின்றது நீரும் வெப்பத்தினால் ஆவியாகி மேலெழும்புகின்றது. இப் பிரபஞ்சம் செயற்படுவதற்கு தீயும் நீரும் காற்றும் ஒத்துழைப்பு வழங்குவதைக் காணுகின்றோம்.

(தொடரும்)

உ

## சமுதாய நலன்

நாம் தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். சமுதாயம் என்பது இனத்தைக் குறிக்கும் சொல்லாகும். உலக மக்கள் பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக வாழ்கிறார்கள். ஒரு நாட்டில் ஒரு சில சமுதாய மக்களோ அன்றிப் பல்வேறு சமுதாய மக்களோ வாழுகிறார்கள், எமது நாடாகிய இலங்கையில் ஆறு சமுதாய மக்கள் வாழுகிறார்கள். அவர்களுள் முக்கியமானவர்கள் தமிழர்களாகிய நாமும் சிங்களவருமே.

ஒவ்வொரு சமுதாயத்தினரும் தாம் சீரோடும் சிறப்போடும் வாழவேண்டும், சுதந்திரமாக வாழவேண்டும், தமது மொழி, மதம், கலாச்சாரம் முதலியன பேணப்படல் வேண்டும். உலகில் தாம் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என எண்ணுவதும் அதற்காகப் பாடுபடுவதும் இயற்கையே.



ஒவ்வொரு சமுதாயமும் எல்லாரும் வாழவேண்டுமென்ற எண்ணத்தை கைக்கொண்டால் பிரச்சனை ஏற்பட முடியாது. தன்னைப் போல் எல்லா உயிர்களையும் நேசிப்போமானால் கருத்து வேற்றுமைக்கு இடமில்லை. எமது தாயகமான இலங்கையில் பல்வேறுஇன மக்கள் வாழ்வதால் சிக்கல்கள் உண்டாகின்றன. முக்கியமாக தமிழருக்கும் சிங்களவருக்குமிடையே இடைவிடாத பூசல்கள் ஏற்படுகின்றன இதன் காரணத்தை நாம் சிந்திப்போமானால் ஒவ்வொரு சமுதாயமும் தமது சமுதாயத்தின் மீது கொண்ட பற்று அல்லது நலனே என்று கூறலாம். சமுதாய நலன் என்றதும் எமக்கு எமது தமிழ்ச் சமுதாயத்தின் நலனே கண்முன் விரிகின்றது. அது இயல்பானதே. இதனைக் குறையென்று கூறமுடியாது என்பது தமிழர்களாகிய எமது பணிவான அபிப்பிராயமாகும்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த குடியானது எமது தமிழ்க்குடி. எமது தமிழ்மொழி இன்றுதனக்கென ஒரு தனி நாடின்றித் தவிக்கின்றது.

உலகெங்கும் பரவி, உயர்பதவிகள் பெற்று அங்கெல்லாம் தமிழ் மன்றங்கள் நிறுவித் தமிழ் வளர்க்கும் நமதுசமுதாயம் தங்குவதற்குச் சொந்த நாடின்றித் தவிப்பது நலமுடையதா? உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம், உலகத்தமிழ் இளைஞர் பேரவை என்பன தனது தொண்டாலும், சிறப்பாலும் புகழேணியின் உச்சியில் வெற்றிக்கொடி கட்டிப் பறக்கும் போது நாம் இங்கு எந்த உரிமையுமின்றி வாடுகின்றோம். இந்நிலை நீடிக்கலாமா?

எமது சமுதாயம் நலம் பெற நாம் ஆவன செய்ய வேண்டும், அதற்கு எமக்கு முதலில் தனித் தமிழ் நாடு வேண்டும் அந்நியரால் சுரண்டப்படாத சொந்தமண் வேண்டும். எமது இயற்கை வளங்கள் எமக்குப் பயன்பட வேண்டும். நாம் இருக்கும் நாடு நமதாக வேண்டும். சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்து வாழும் நிலை நீங்க வேண்டும். அப்பொழுதுதான் எமது சமுதாயம் நலம் பெறும். நாமும் வளமுடன் தலை நிமிர்ந்து வாழலாம்.

பா. வசந்தா.

ஊ —

# நிறுவனரின் வாழ்க்கை வரலாறு

## அங்கம் — 5

எமது வாழ்க்கை வரலாற்றில் இவ் அங்கத்தில் 1981ம் ஆண்டு முதல் 1986ம் ஆண்டு வரையிலான நிகழ்வுகளை எழுத முற்படுகின்றோம். ஆலை உற்பத்தியை திறமையாக செயற்படுத்தி தரமான அரிசியை வழங்கவேண்டுமென்ற எண்ணத்தினால் இருபத்தினாலு மணி நேரமும் ஆலை உற்பத்தியில் முழுக் கவனத்தையும் செலவழித்துள்ளோம். இக் காலங்களில் எமது மகன் ஆலைக்குரிய நெல்லு வாங்கிவந்து தருவது வழக்கம். 1983-1984ம் ஆண்டளவில் இனக் கலவரம் ஆரம்பித்ததன் பிற்பாடு பலவிதமான சிக்கல்கள் ஆலையில் ஏற்படலாயின. எமது ஆலையிலிருந்து அரை மைல் தூரத்தில் பருத்தித்துறை இராணுவ முகாம் அமைந்திருந்தமையினால் கெடுபிடிகள் நாளடைவில் கூடலாயின. கெடுபிடிகள் கூடிய காரணத்தினால் 1986ம் ஆண்டு ஆனி மாதமளவில் தொழிற்சாலை வேலைகள் நிறுத்தப் பெற்றன. இக் காலங்களில் சகல போராளிக் குழுக்களுக்கும் மாதாந்தம் அரிசி உதவியாக வழங்கப்பெற்றன. 1986ம் ஆண்டு பிற்பகுதியில் நாட்டின்சூழ்நிலை காரணமாக ஆலையின் பெரிய கட்டிடத்தில் உள்ள கூரைத் தகடுகளும்-ஓடுகளும் கழற்றிவிட்டிருந்தோம்.

1982ம் ஆண்டு மகனுக்கு விவாகம் நடந்தது. விவாகம் நடப்பதற்கு எட்டு வருடங்களுக்கு முன்னரே ஒருவரை ஒருவர் விரும்பியதோடு அவரது மனைவி வீட்டுக்கும் போய்வந்துள்ளார். மருமகளின் தந்தையார் இப் பிள்ளைக்குரிய சீதன வீட்டைக் கட்டாமையினால் விவாகத்தைச் செய்துகொள்ள முடியவில்லை. இக் காரணத்தினால் எமது மகனும் - குடும்பத்தினரும் வேறு இடத்தில் விவாகம் செய்ய எண்ணிக் காலத்தைக் கடத்தி வந்தார்கள். எவரது மனதையும் நோகச் செய்வதை எமது வாழ்க்கையில் கடைப்பிடிக்காத காரணத்தினால் எமது மனநிலையில் குடும்பத்தாரின் நடவடிக்கையினை ஏற்



றுக்கொள்ள முடியவில்லை. எனவே மருமகளின் பெற்றோரை அணுகி வீட்டைக் கட்டிக்கொடுக்கும்படி நெருக்கிவந்தோம். அவர்களால் அத்திவாரத்தை மட்டும் கட்டி முடிக்க முடிந்ததே தவிர, வீட்டைக் கட்ட முடியவில்லை. வீட்டை முழுமையாக கட்டிமுடிப்பதென்றால் ஒன்றரை இலட்சம் அளவில் தேவைப்படலாம் ஆனால் மருமகளின் பெற்றோர் 40 ஆயிரம் ரூபாவை மட்டும்தர ஒப்புக் கொண்டார்கள். பெண்ணின் மனதை நோகப்பண்ணக் கூடாது என்ற காரணத்தினாலும்—மனநிலையாலும் இவ் விவாகத்தை நடாத்திமுடிக்க வேண்டுமென எண்ணினோம். பெண்ணின் பெற்றோர் வீடுகட்டுவதற்குத் தருவதாகச் சொல்லிய பணம் 40 ஆயிரத்தையும் வங்கியில் போட்டதும் விவாகத்தை நடத்தினோம். மகனுக்குரிய சீதன வீடு முழுமை பெறாமையினால் எமது வீட்டிலேயே வசித்துவந்தார்கள். இக் காலத்தில் மகனுக்கு ஒரு புதிய கொண்டா மோட்டார் சைக்கிளையும் வாங்கிக்கொடுத்திருந்தோம்.

நாம் முன்னர் இளைய மகளுக்கென வாங்கிய காணியை இரு கூறாக்கி இரண்டாம் மகளுக்கென 1982ம் ஆண்டு அளவில் ஒரு வீட்டை இரண்டரை இலட்சம் ரூபா செலவில் நிர்மாணம் செய்து முடித்து குடியும் புகுந்தோம். 1983ம் ஆண்டளவில் எமது மகனுக்கு ஒரு மகள் பிறந்தா. 1985-1986ம் ஆண்டு காலப்பகுதியில் இரண்டாம் மகளுக்கு கட்டிய வீட்டு நிலம் போக, மற்றைய பாகத்தில் இளைய மகளுக்கு இரண்டு இலட்சம் ரூபா செலவில் கிணறும் வீடும் நிர்மாணம் செய்துள்ளோம்.

இவ்விடத்தில் இவ்விடயத்தை நிறுத்தி முன்னர் நாம் ஆரம்பத்தில் கூறிய இடத்திற்குச் செல்லலாம் என எண்ணுகிறேன். 1986ம் ஆண்டு ஆனியில் அரிசி ஆலையின் வேலைகள் நிறுத்தப்பெற்றதின் பிற்பாடு மகனது வீட்டு நிர்மாணத்திற்கென கொங்கிறீற் கல்லுகளும் தீராந்தி வகைகளும் கொடுத்து உதவியதோடு, வேலைக்கு இவ் ஆலைத் தொழிலாளர்களை அனுப்பியிருந்தோம். இக் காலங்களில்

அசம்பாவித காரணங்களினால் வீடு கட்டும் வேலைகள் ஒழுங்காக நடைபெறமுடியவில்லை. அசம்பாவிதங்களினால் ஆலையைவிட்டு வெளியேறிய பிற்பாடு வெளியார் அரிசி ஆலையில் நெல்லைக்குற்றி வீட்டில்வைத்து தொழிலைச் செய்துவந்தோம். ஆலைத் தொழிலோடு நகைப் பொறுப்பிற்கு பணம் கொடுத்து வருவது வழக்கம். வீட்டில் தொழிலை ஆரம்பித்தபின்னரும் கூட வெளியால் பணத்திற்கு சாப்பாட்டைப் பெற்றே சாப்பிடுவது வழக்கமான ஒன்றாகிவிட்டது. இக்காலப்பகுதியில் அடைவு நகையின் ஒரு பகுதி பாதுகாப்பின் நிமித்தம் எமது மகனது வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பெற்றது. வீட்டில் தொழிலை ஆரம்பித்த மூன்று நான்கு மாதங்களின் பிற்பாடு தமது பொறுப்பில் இருந்த நகைகளை, ''தான் வைத்திருக்க முடியாதென வும், நீங்களே பெற்றுப் பாதுகாக்குமாறும், இல்லாவிட்டால் அந் நகைகளை தெருவில் எறிந்து விடப்போவதாகவும்'' எமது மகன் கூறியிருந்தார். இத்தோடு எமது மைத்துனரையும் சந்தித்து இந்நகை பணங்களைப் பிறிக்குமாறும் கரைச்சல்கொடுத்து வந்தார். இக் காரணங்களினால் அவரிடம் உள்ள நகைகளை எல்லாம் வாங்கி காசுவகைகளை மகனிடமும், நகைகளை 2ம் 3ம் மகளிடமும் ஒப்படைத்திருந்தோம். ஒவ்வொருவரிடமும் கொடுத்த நகைகளுக்கு ஒரு கொப்பியில் பதிவும் வைத்துக் கொடுத்திருந்தோம். பணம், நகைகள் ஒவ்வொருவரிடமும் மூன்று இலட்சம் கொடுக்கப் பெற்றது.

நாட்டின் சூழ்நிலை காரணமாக எமது இரண்டாம் மகளுக்கு ஏற்பட்ட விபத்துப்பற்றி இவ்விடத்தில் கூறலாம் என நினைக்கின்றோம். பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்த எமது இரண்டாம் மகள் 1984ம் ஆண்டில் கண்டியிலே ஆசிரியத் தொழிலைப் பொறுப்பேற்றுக்கொண்டார். பாடசாலை விடுமுறைக்கு வீடுவந்து பாடசாலை தொடங்க கண்டிக்குப் போவது வழக்கமாய் இருந்தது.

1986 ஆனியில் இராணுவ கெடுபிடி உள்ள நேரத்தில் கண்டியில் இருந்து விடுமுறைக்கு வீடு திரும்பும்போது வழமையான பாதையால்



வரமுடியாத காரணத்தால் திருமலை-பருத்தித்துறை வீதியால் வரும் போது பன்குளத்தில் ஆயுதக் கும்பலின் வன்செயலுக்கு இலக்காகி, காலில் சூட்டுக் காயத்துடன் திருமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பெற்றார். இச்செய்தியைக் கேள்வியுற்றதும் போக்குவரத்துச் சீர்இன்மையாலும் நாட்டின் அசம்பாவிதங்களாலும் திருமலை போகக் கூடிய சூழ்நிலை சாதகமாய் இருக்கவில்லை. 10 நாட்கள் கழிந்த பின்னரே எம்மால் திருமலை போகமுடிந்தது.

திருமலையில் ஒரு மாதம் வைத்தியம் செய்தபின்னர் யாழ்ப்பாணம் கொண்டுவர விரும்பி பிரத்தியேகமாக ஒரு வாகனத்தை ஒழுங்கு செய்து திருமலை-மதவாச்சியூடாக யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தோம். இவ்விடம் வந்ததும் மானிப்பாய் வைத்தியசாலையில் கொண்டு சென்று சேர்ப்பித்தோம். அங்கிருந்து யாழ் பிரதான மருத்துவமனைக்கு மாற்றி வைத்தியத்தை மேற்கொண்டோம். பின்னர் கால் வழங்குவதற்கான பயிற்சியை வீட்டில் வைத்து தனியார் வைத்தியர் மூலம் செயற்படுத்தினோம். சம்பவம் நடந்த தினத்தில் இருந்து ஆறு மாதங்களின் பிற்பாடே அவர் நடக்கக்கூடிய நிலையை அடைந்தார்'

(தொடரும்)

## எமது வெளியீடுகளின் விநியோகம் பற்றிய ஒரு சிறு குறிப்பு

எமது மாதாந்த இலவச வெளியீடான 'அறத்தமிழ் ஞானம்' வெளியீடுகளை பொது அமைப்புகள் மூலமாக விநியோகம் மேற்கொண்டு வருகிறோம். மேற்கூறிய அமைப்புகள் இவ் விநியோகங்களை தம்மால் இயன்றவரையில் சிறப்பாகச் செய்துவருகின்றன என்ற வகையில் அவர்களுக்கு எமது நன்றியும் பாராட்டும் என்றும் உரியது.

இதைவிட பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்கத்தினர் இப்பணியை சிறந்த முறையில் மேற்கொள்வதை சுட்டிக்காட்டலாம். அவர்கள் எம்மிடமிருந்து பெறுகின்ற வெளியீடுகளை விநியோகிக்கின்ற முறையினைப் பார்க்கின்றபொழுது எமக்கு மிகுந்த மனத்திருப்தி உண்டாகின்றது. கடமை உணர்வுடனான அவர்களது சேவையை போற்றுவதற்கு எம்மிடம் வார்த்தைகளே கிடையாது. அந்நிறுவனம் விரைவில் மேல்நிலையடைந்து மற்றைய நிறுவனங்கட்கு வழிகாட்டியாய் அமைவதற்கு இறை அருளை வேண்டுகிறோம்.

- நிறுவனர்

௮—

# பாரதியாரின் 71-வது நினைவுச் சிறப்பிதழ்

## ஓர் ஆய்வு

எந்த ஓர் ஆய்வும் இரண்டு கருத்துக்களைத் தாங்கியதாக வெளிவரவேண்டும். இங்கேதான் நீதி வாழ்கிறது, 'நீதியான சமூகம் ஒன்றினாலேயே நீதியை உணர்ந்துகொள்ள முடியும்.' இது பிளேட்டோவின் கருத்து. பொதுவாக நல்ல பண்புகளும் தவறுகளும் இங்கே ஒப்புநோக்கப்படுகின்றன.

01-09-92ல் வெளிவந்த 'அறத்தமிழ் ஞானம்' ஆழ்ந்து நோக்க வேண்டிய தேவையுள்ள நூல். இதனைப் பார்த்தவுடனேயே பாரதியாருக்கும் இந்நூலுக்குமுள்ள தொடர்பு வெளிப்படுகிறது. பாரதியாரின் அழகிய உருவப்படம் முன்னட்டையை அலங்கரிக்கிறது. ஐம்பது பக்கங்களில் கையடக்கமாக வெளிவந்துள்ள தன்மை இதற்கு முதலாவது நேர்க்கணியப் புள்ளியை வழங்குகிறது. வெளிநாட்டுப் பத்திரிகையோ என வியப்புறும் வண்ணம் உள்ளதான அமைப்பு இதற்கு மேலும் ஒரு சிறப்பு.

பத்துத் தலைப்புகள் சிறந்த உள்ளடக்கத்தின் வெளிப்பாடாக அமைகிறது. முதலாவதாக தரப்பட்ட அறிவுக் களஞ்சியம் 46 வினாக்களைத் தாங்கி மாணவப் பராயத்தினர்க்கு அரும் ஞானத்தை அளிக்கிறது, போபர்ஸ் நச்சு வாயு வெளிப்பட்ட போதும் இரு வீடுகளிலிருந்தோர் எவ்வித பாதிப்புமடையாதிருந்த செய்திக் குறிப்பு மூலம் வேள்வியின் மகிமை சொல்லப்பட்ட விதம் பாராட்டப்படவேண்டியது.

'கந்தபுராண வரலாற்றில் ஐம்பூத விளக்கங்கள்' என்ற திருவனரின் சிந்தனை மூலம் அரும் கருத்துக்களை மேற்படி மாணவர் அடையலாம்.

மருத்துவக் குறிப்புக்களில் மனிதர்க்கும், மிருகத்திற்கும் தரப்பட்டுள்ளது. தடுப்பு முறைகள் அறநெறிக்கு ஒரு சிறப்பு சுகாதாரப் பழக்கங்களை ஊக்குவிக்கவேண்டும் என்பதே எல்லோரதும் விருப்பு.



கால்நடை வளர்ப்போர் இன்று அதிகம். அவர்கட்கு இந்த மிருக நோயியல் குறிப்புகள் பயன்தரும். இதுவும் நேர்க்கணியப் புள்ளியைப் பெறுகின்றது.

ஐம்பது வயதுக்கு மேற்பட திருவனரின் வாழ்க்கை வரலாறு எண்பத்தொன்றுகளில் நின்றுவிட, மீதியைப் படிக்கவேண்டுமென்ற ஆவல் தூண்டியது நிசமே.

பிரபஞ்சத் தத்துவம் பற்றிய ஆய்வுத் தொடர் பரிணாம வெளிப்பாட்டைத் தொடர்ந்திருக்கிறது. இது உண்மையே கடவுள் என்ற நோக்கை நோக்கிச் செல்லும் தன்மையைக் காணக்கூடியதாக உள்ளது.

'பாரதியாரின் 71வது நினைவுத் துளிகள்' என்ற அம்சம் 40ம், 41ம் பக்கங்களிலும் அவர் வாழ்க்கையை விபரித்திருக்கும் தன்மை சிறப்பாயமைகிறது.

பொதுவாக இந்த வெளியீட்டிற்கு பெயரிட்டது போலவே பாரதியாரின் வெளிப்பாடுகட்கு முக்கிய களம் கொடுத்திருந்தால் இந்நூல் நூறு வீதம் உயர்ந்திருக்கும் சமர்ப்பணத்திலும் பாரதி பெயர் இடம் பெற்றிருந்தால் மேலும் சிறந்திருக்கும்.

ஒருவன் கடமையை கடமைக்காகச் செய்து ஞான மார்க்கத்துக்குரியவனாகும் பொழுது அச் செயல் படைக்கப்பட்ட நோக்கத்திற்குரியதாகிவிடுகிறது. இது கீதை விளக்கம். இந்த வகையில் நடுநிலை நின்ற இந்த நூல் ஆய்வு நீதியானதாகிறது என்பது எமது முடிவு.

செ. பாலநாதன்,
விஞ்ஞானக் கல்லூரி. கரவெட்டி

# குடும்பத்திற்கேற்ற மனைவி எப்படி அமைய வேண்டும் என்ற தத்துவம்

அடியன் நான் இவ்வுலகில் ஆறுதலாய் வாழ்வதற்கு
படிமீதில் நல்ல குண நங்கையொன்றே வேண்டியது
ஆபத்திலே எனக்கு ஆலோசனைக்காரி
கோபத்திலே எனக்கு குணசீலமான குன்று
வீட்டிலே என்தனுக்கு விளக்குகின்ற பொக்கிசமாய்
நாட்டிலுள்ளோர்க்கெல்லாம் நல்ல ஒளி தீபமதாய்
விளங்குமொரு சற்குணத்தை மெல்லியர் சிரோன்மணியை
களங்கமற்ற கண்மணியை கன்னிதனைத் தந்தருள்வாய்
செல்வர் குலத்துதித்த செந்தேனே யானாலும்
கல்வியறிவில்லாத கன்னியெனக்காகாது
நாணம் மரியாதை நல்லொழுக்கத்தோடு கல்வி
பூணும் பெண் அல்லாத பூவையெனக்காகாது
மஞ்சள் மினுக்கும் மயிர் மினுக்கும் மேனி மினுக்குமாய்
மிஞ்சி மினுக்குமந்த மெல்லியளும் ஆகாது
தன் அழகை மேலதென்றும் தன் கணவன் கீழதென்றும்
பன்னும் பெண் ஆகாது பாரிலவமானமிது
வந்த விருந்ததனை மனங்குளிர ஒப்பாமல்
அந்தப்புரம் முணுங்கும் அரிவையவள் ஆகாது
தேகமுடன் உடையை தினம் சுத்தி செய்யாமல்
நாகரீக மற்றிருக்கும் நங்கையவள் ஆகாது
உண்மை பேசா மங்கையவள் உத்தமியாயிருந்தாலும்
தினம் தோறும் தெய்வ வழிபாடு செய்யா மங்கையவள்
இனத்தவளாயிருந்தாலும் இவ்வுலகில் அவள் வேண்டாம்
பணத்தோடு சினம் கொள்ளும் பத்தினியுமாகாது
பொய்பேசி எமையக்கி பொழுதெல்லாம் இளிப்பதுவாய்
மெய்நோக உடலுழையா மேனகையும் ஆகாது

**சி. சிவகுமாரன்** — ஏழாலை



# சிந்திப்போம் செயல்பெறுவோம்

## நிறுவனரின் சிந்தனைத் துளிகள்.

உண்மையில் கவர்ச்சி கிடையாது. திரித்துக் கூறும் போது கவர்ச்சி ஏற்படுகிறது. கவர்ச்சியையே மக்கள் அதிகம் விரும்புகிறார்கள். சினிமா, நாடகங்களில் மக்கள் அதிக நாட்டங்கொள்வது கவர்ச்சி காரணமேயாகும்.

இந்நூல் தபாலில் கிடைத்ததும் அதற்கான பதில் தரவேண்டியது அவரவர் கடமை என்பதை உணர்ந்து செயலாற்றுங்கள்.

இவ்வுடலை தூக்கி எறிந்துவிட்டு (சரீரம்) நாம் காவிக்கொண்டிருக்கும் (தன்மாத்திரை) ஐந்து பூத அணுக்கூறுகளைக் கொண்ட ஆன்ம அலையுடன் போக ஆயத்தமாகிறோம். நாம் செய்த வினைப் பயனாய் (கருமம்) அமைந்த ஐந்து பூத அணுக்கூற்றின் அமைப்பிற் கேற்பவே செல்லுமிடம் அமையப்போகிறது.

கொண்ட குணத்தை குருவாலும் மாற்றமுடியாது. உதாரணம் சூரனது குணம் சிவபெருமானால் மாற்றமுடியாதது.

எழுதுவதும் பிரசங்கம் செய்வதும் சுலபம். செயலிற் செய்வது கடினம். ஒவ்வொருவரது செயலையும் அவதானித்து உண்மையை உணரவேண்டும்.

பகுத்தறிவில்லாத உயிரினங்கள் ஒரு இனம் வேறு இனத்தைய கொலை செய்யும். தன்னினத்தை அதே இனம் கொலைசெய்வது கிடையாது. சிங்கம், கரடி, நாய், கீரி, பாம்பு, ஓணான், பல்லி, சிலந்தி, ஈ, எறும்பு இவ்வாறான பிராணிகள் எல்லாம் ஒன்று மற்றையதைப் பிடித்து உண்ணும். சிங்கம் கரடியையும், கரடி நாயையும், நாய் கீரியையும், கீரி பாம்பையும், பாம்பு ஓணானையும், ஓணான் பல்லியையும், பல்லி சிலந்தியையும், சிலந்தி ஈயையும், ஈ எறும்பையும் இவ்வாறே ஒவ்வொன்றும் தன்னினமில்லாத மற்றைய இனங்களை உண்ணுகின்றன. இவை தமது உடல் பசியைப் போக்குவதற்காகவே அவ்வாறு செய்கின்றன. இவை பகுத்தறிவற்றவை. பகுத்தறிவுள்ள மனித இனம் தனது இனத்தை கொன்றொழிக்கிறது. அதிகார ஆசை காரணமாக மனிதனை மனிதனே கொல்லுகிறான். மனித அறிவு சிறந்ததா? பகுத்தறிவற்ற வாய் பேசாப் பிராணிகளின் அறிவு சிறந்ததா! சிந்தித்தால் உண்மைகள் வெளிவரலாம்.

ஸ —

## பாராட்டுக் கடிதங்கள்

''அறத் தமிழ் ஞானம்'' என்னும் சஞ்சிகையில் 1-8-92 இல் வெளியான ''தெய்வீக மூலிகைகள்'' மருத்துவச் சிறப்பிதழ் ஒன்றை படிக்கக் கிடைத்தமைக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

நாம் சாதாரண மூலிகை மருத்துவத்தின் மூலம் எப்படி ஆரோக்கியமாக வாழலாம், அவைகளின் பாவனை முறைகள் என்ன என்பதைத் தெளிவாகத் தந்துள்ளீர்கள். இதைப் படித்த மறுகணமே நான் செயலில் இறங்கிவிட்டேன். அதாவது பெற்றுக்கொள்ளக் கூடிய எல்லா மூலிகைகளையும் எம் இல்லத்தில் வளர்த்து, இருப்பவற்றைப் பாதுகாத்து, என்னுடன் தொடர்புகொள்ளும் சாதாரண நோயாளர்களுக்கு இதன் மூலம் உதவி செய்ய வேண்டுமென்ற ஒரு புதிய ஆவல் என்னிடம் தோன்றியுள்ளது.

இதே வேளையில் ஒரு சிறு பிரச்சினை. நீங்கள் குறிப்பிட்டுள்ள சில மூலிகைகளை எப்படி எங்கே பெற்றுக்கொள்வது? உ—ம் அத்தி, வில்வம் இலை போன்றவை. அத்துடன் சில மூலிகைகள் எம் இல்லத்தில் இருந்தாலும், அவைகளின் பெயர் என்ன? அல்லது எப்படிக் கண்டுகொள்வது? யாராவது நேரில் வந்து எமக்கு அவற்றைத் தெரியப்படுத்துவார்களா? என்ற கேள்விகளும் எழுகின்றன.

இது ஒருபுறமிருக்க, மருத்துவத்தோடு நின்றுவிடாமல், எவ்வாறு நாம் மெய்மறந்து இறையுடனும் தொடர்புகொள்ள முடியும்? அதாவது மனிதன் எப்படி இறைவனாகலாம் என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளீர்கள். உண்மை, நேர்மை, நீதி எல்லாமே அழிந்த நிலையிலுள்ள ஒரு சமுதாயம் எப்படி மீண்டும் அந்த அறவாழ்வைக் கட்டி எழுப்பலாம் என்பதையும் குறிப்பிட்டுள்ளீர்கள். எனவே உங்கள் வெளியீடானது, நோயுற்ற மனிதனின் சரீரத்துக்கு சுகத்தைத் தருவது போல, நோயுற்ற அவனின் ஆன்மாவையும் இறைவலில் சுகம் பெறச் செய்கிறது இத்தகையதோர் வெளியீட்டைத் தயாரித்த தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியும் பாராட்டுகளும் உரியதாகுக! இதனைப்போன்ற வேறு மூலிகை மருத்துவங்களையும் தொடர்ந்து படிக்க ஆவலாயிருக்கிறேன். இந்த வெளியீட்டை எம் இல்லத்தில் எத்தனையோ பேர் தொடர்ந்து படித்துக்கொண்டிருக்கிறார்கள். உங்கள் வெளியீட்டுக்கு நன்றி.

சகோதரி பற்றிக்,

திருக்குடும்ப கன்னியர் மடம்,
பாஷையூர். 16-9-92



## பாராட்டுக் கடித தொடர்:

11-8-92 ல் வெளியான உங்கள் புத்தகங்களை வாசிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

உங்கள் ஆக்கங்கள். கருத்துக்கள் அனைத்தும் அறிவுக்களஞ்சியமாகவே இருக்கின்றது. படிப்பறிவில்லாத பாமரமக்களுக்கு வெகு விரைவில் கிரகிக்கக் கூடியதாகவும் அறிந்துகொள்ளக் கூடியதான நடைமுறையில் கடைப்பிடிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது.

இறை இயல், உளவியல், உடல் இயல், உலகியல் அனைத்து இயல்களையும் உள்ளடக்கியதாக இருப்பதினால் இன்றைய போர்க் கால சூழலில் வாழும் மக்களுக்கு வாழ்வளிக்கும் மருந்தாக விளங்குகின்றது என்பதில் ஐயமில்லை.

மனிதன் இன்று உருக்குலைந்தவனாக உள்ளம் உடைந்தவனாக வாழ்ந்துகொண்டிருக்கின்றான். குறிப்பாக கொலை, கொள்ளை, வழிமறித்தல், கலப்படம்,லஞ்சம் முதலிய நோய்கள் காணப்படும் இக்காலத்தில் அவனுக்கு இந்நூல்கள் மிகவும் தேவைப்படுகின்றன. இதை வாசித்து மற்றவர்களுக்கும் பறைசாற்ற என்போன்றவர்களுக்கு இவ்வ உதவுகின்றது.

இன்னும் உங்கள் ஆக்கங்களை, நல்ல கருத்துக்களை மடக்கி வையாது பாமர மக்களுக்கும் அறிவாளிகளுக்கும் பயன்படக் கூடிய முறையில் எழுதி சமுதாயத்தை இன்னும் கூடிய முறையில் முன்னேற்ற உங்கள் அனைவருக்கும் அருள்தரவேண்டி முடிக்கிறேன்.

நன்றி

அருட் சகோதரி எம். பிறிசில்லா,

திருக்குடும்ப கன்னியர் மடம்,
பாஷையூர், 16-9-92

ஏட —

# உண்மையே கடவுள் - கடவுளே அறம்
# அறமே கடமை

எமது வரவுள்ள வெளியீடுகளில் பின்வருவனவற்றின் காரணங்களை விளக்கமாக எழுத விரும்பியுள்ளோம்.

1. ஆன்மா இறைவனுடன் ஏன் சங்கமமாகவேண்டும்?
2. இறைவனுடன் ( உண்மைப் பொருள் ) ஆன்மா சங்கமமாக என்ன செய்யவேண்டும்?
3. இவற்றின் உண்மையை ஏன் உணரவேண்டும்?
4. இது செயற்படுத்த முடிந்த காரியமா?
5. இவற்றிற்கு எமது சிறு பராய வாழ்வு எவ்வாறு அமைய வேண்டும்?
6. ஒரு மாங்கனிக்காக இரு இறை புத்திரர்கள் போட்டியிடுகிறார்கள். இதன் தத்துவ உட்பொருள் என்ன?
7. சிவபெருமான் முழு வரத்தையும் கொடுத்த சூரனது கொடுமைகளை ஏன் திருத்த முடியவில்லை?
8. ஒருவரது ஆணவ ஆதிக்கத்தை என்ன முறையில் அழிக்கலாம்?
9. ஆணவத்தால் அழிந்தவன் திரும்ப அதே பிறவிக்கு வர முடியுமா? அதற்குரிய விளக்கங்கள் என்ன?
10. முருகன் வள்ளியை மணம் செய்ய ஏன் விநாயகனை நாடினான்?
11. சிவபெருமானுக்கு ஞானப்பொருளை விநாயகனால் உபதேசிக்க முடியவில்லை. ஏன்?
12. மாங்கனியை முருகன் ஏன் பெறமுடியவில்லை?
13. உடல் நீறாகலாம். ஆன்மா நீறாக வேண்டுமானால்...?
14. தக்கன் சிவபெருமானை மதியாத எண்ணம் எவ்வாறு உருவானது?



15. காணாத முடியை கண்டேன் எனச்சொல்லும் எண்ணம் பிரமாவுக்கு ஏன் உருவானது?
16. சூரனுக்கு அகங்கார எண்ணம் உருவானதன் காரணம் என்ன?
17. முருகனை ஏன் ஞானப்பொருள் என அழைக்கிறோம்?
18. விநாயகன் மாங்கனிக்காக தகப்பனை வலம் வரும் எண்ணம் எவ்வாறு உருவானது?
19. சமய வரலாற்றிலுள்ள உண்மைகளை மக்கள் ஏன் மாறி உணருகிறார்கள்?
20. பாண்டவர்கள் அறநெறியில் வாழ்வதற்குரிய எண்ணம் எவ்வாறு உருவானது?
21. வீரபத்திரக் கடவுள், வைரவக்கடவுள் சிவபிரானது உடல் அக்கினியில் பிறந்ததாக குறிப்பிட்டதன் உண்மைகள் என்ன?
22. முருகன் சிவபிரானது நெற்றிக் கண்ணில் உருவானதான உண்மை விளக்கங்கள் என்ன?
23. விநாயகன் மட்டும் அக்கினியில் உதிக்காமல் தாய்க்கும் தகப்பனுக்கும் பிறந்ததன் உண்மை வரலாறு என்ன?
24. உடல் உழைப்பின்றி எந்தவித ஆன்ம உயர்வும் அடைய முடியாத காரணம் என்ன?
25. சூது, கொலை, களவு முதலியன கீழ்நிலைக்கு மனிதனை ஆளாக்குகிறது அதற்குரிய காரணம் என்ன?

---

மதியாதார் முற்றம் மதித்து ஒருகால்சென்று
மிதியாமை கோடிபெறும்
உண்ணீர் உண்ணீரென்று உபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடிபெறும்
கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடிபெறும்
கோடானு கோடி குடுப்பினும் தன்னுடையநா
(உண்மை பேசுதல்) கோடாமை கோடிபெறும்.

— ஔவையார்

# கேள்வி / பதில்

*சி. சிவானந்தராசா*
*நவில்ட் பாடசாலை, கைதடி.*

**கேள்வி:** ஒருவர் இறந்த பின்பு பல ரூபாய்களைச் செலவு செய்து அவருடைய பல கிரியைகளை மக்கள் செய்கின்றனர். இவர்கள் செய்யும் கிரியைகளின் பலன் செத்தவருக்கா அல்லது செய்பவருக்கா சேர்கின்றன. செத்தவர்க்கெனில் வேறு ஒருவர் செய்யும் வினைகள் அவரின் வினைகளாகுமா?

**பதில்:** *''தாம் தாம் செய்த வினை ( கருமம் ) தாமேயனுபவிப்பர்'' இதை எந்த சக்தியாலும் மீறமுடியாது. மக்கள் கோவிலுக்குப்போய் வணங்குவதால் கடவுளுக்கு எவ்வித பலனுமில்லை. வணங்குபவருக்கே அதற்குரிய வினைப் பயன் சேருகிறது. ஒருவர் இறக்கு முன் செய்த கரும வினைப் பயன்கள் அவரது சூக்கும தேக தன்மாத்திரையில் (ஐந்து பூத அணுக் கூறுகளில்) பதிவாகியிருக்கும். அதற்கேற்பவே அவரது அடுத்த பிறவி அமைகிறது, அவருடைய மக்கள் செய்யும் கிரியைகளின்பலன், செய்யும் மக்களது ஐந்துபூத விகிதாசாரத்தில் மாறி அமைந்து (கரும வினைப்பலன்) அம் மக்களை சேருகின்றன. எவ்விதத்திலும் ஒருவர் செய்யும் வினைப்பயன் இன்னொருவருக்கு சேருமென்பது மாயை கவ்விய கருத்துலகமாகும். வெளிவரவுள்ள ''அறத தமிழ் ஞானம்'' வெளியீடுகளில் விபரங்கள் அறியலாம்*

*நீங்கள் அனுப்பும் அறநெறிக் கேள்விகளுக்கு*
*விநாயகர் தரும நிதிய நிறுவனர் அனுபவரீதியாக*
*பதில்களைத் தரக் காத்திருக்கின்றார்.*

கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:-
நிறுவனர்
**கேள்வி / பதில்**
விநாயகர் தரும நிதியம்,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.



## விநாயகர் தரும நிதியம்

புலோலி மேற்கு, பருத்தித்துறை.

விநாயகர் = பிள்ளையார், அறிவுப்பொருள், காற்றுப்பூதம் ௭ — எண்களில் 3, கிரகங்களில் வியாழபகவான், மனித அவயவத்தில் வலக்கண் இவைகளைக் குறிக்கும்.

ஞாபகார்த்த நிதி = திரு சி. ஆ. சிவக்கொழுந்து
திருமதி. ஆ. சி. இராசம்மா (சித்து)
( வ. க. கோ சரவணமுத்துவின் மகள் )
செல்வன் ஆ. சி, மு. சுப்பிரமணியன்

நோக்கம் = அறிவு வளர்ச்சிப் பணி
ஊனமுற்றோர் உதவிப் பணி
கரும யோகப்பணி

*தர்மகர்த்தா சபை -*

திரு. ஆ. சி. முருகுப்பிள்ளை
நிறுவனர், நிர்வாகி, ஆயுட்காலத் தலைவர்
திரு. வ. கு. கணபதிப்பிள்ளை
பீ. ஏ. (லண்.) சட்டத்தரணி, உப தலைவர்
வ. ச. செல்வராசா
செயலாளர் — பொருளாளர்
திரு. க. தங்கராசா
நிர்வாகப் பொறுப்பதிகாரி

*கௌரவ உறுப்பினர்கள்:*

திரு. அ. துரைசிங்கம்
திரு. சு. வேதாரணியம்
திருமதி. கோ. கண்மணி

*கௌரவ உப உறுப்பினர்கள்:*

திரு. ஆ. க. சிவப்பிரகாசம்
திரு. வி. க. கேதீஸ்வரநாதன்

# எமது வெளியீடுகளை பின்வரும் விலாசங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

| | |
|---|---|
| கலைச்சோலை | வல்வெட்டித்துறை |
| அன்னை மருந்தக மருந்துச்சாலை | பருத்தித்துறை |
| அஷ்டலட்சுமி கலண்டர் நிறுவனம் | கண்டிறோட், கைதடி |
| அபிராமி மருந்தகம் | நீர்வேலி |
| பூபாலசிங்கம் புத்தகசாலை | யாழ்ப்பாணம் |
| எஸ். கே. சாமி அன் கோ. | நெல்லியடி |
| தனலட்சுமி புத்தகசாலை | சுன்னாகம் |
| முத்தமிழ் மன்ற நூலகம் | சுன்னாகம் |
| சூரியா பார்மசி | புத்தூர் |
| ரி. வி. பாலா | இணுவில் |

*

இச் சஞ்சிகை புலோலி மேற்கு பருத்தித்துறை விநாயகர் தரும நிதியத்தினருக்காக நெல்லியடி தமிழ்ப்பூங்கா அச்சகத்தில் பதிக்கப் பெற்றது.